TARGETING 5th தேர்வு



# TNPSC GROUP-II 2023

## QUESTION WITH SIMPLIFIED ANSWER

## MAINS WRITTEN EXAM

Marks : 300
Time : 3 Hrs

- பொது வாழ்வில் ஊழல்
- கல்வி – கல்விக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையேயான தொடர்பு
- சமுதாய மேம்பாட்டு திட்டம்
- வேலை உறுதியளிப்புத் திட்டம்
- சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு
- சமூக நல பணிகளில் என்.ஜி.ஓ.வின் பங்கு
- அரசின் சுகாதாரக் கொள்கை

ARISE AWAKE ACHIEVE
SURESH' IAS ACADEMY

தமிழ் வழி

| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
| --- | --- | --- | --- | --- |
| 0461 - 4000970 | 0462 - 2560123 | 75503 52916 | 0452 - 2383777 | 97555 52003 |
| 99445 11344 | 98942 41422 | 75503 52917 | 98431 10566 | 97555 52009 |

TEST 5 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

அலகு - 1

**1) ஊழலை கட்டுப்படுத்த என்னென்ன நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது?**

**ஊழலை கட்டுப்படுத்துவதற்கான நிர்வாக நடவடிக்கைகள்** 6

**1. மின்னாளுகை**

- கையூட்டு பெறுவதற்கான வாய்ப்பினை குறைக்கிறது. உதாரணம் : தேசிய மின்னாளுகைக் கொள்கை

**2. பொதுக்கொள்முதல்களில் இ-ஒப்பந்தங்கள்**

- இணையதள மூலம் பொதுக்கொள்முதல்களில் மின்னாளுகை ஒப்பந்தங்கள் செயல்முறைகள்

**3. நேரடி பலன் பரிமாற்றம்**

- தேசிய அளவிலான மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் நேரடியாக குடிமக்களுக்கு வழங்கப்படுகிறது.
- உதாரணம் : மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்
- குடிமக்களுக்கு நேரடியாக கூலி மாற்றம் செய்யப்படுகிறது.

**4. குடிமக்கள் சாசனங்கள்**

- குடிமக்களுக்கான சேவைகளுக்கான வழங்குதலை மேம்படுத்துகிறது.

**5. அரசு அலுவலர்களுக்கான பணியாளர் விதிகள்**

- அரசு அலுவலர்கள் பரிசுகள் பெறுவதை தடை செய்கிறது. உதாரணம் : அனைத்திந்திய பணிகள் நடைமுறைகள்
- 1968

**6. ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் வெளிப்படைத் தன்மை**

- மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டங்களை பொதுமக்கள் அணுக முடியும்.

**2) தமிழ்நாடு லோக் ஆயுக்தா பற்றி விவரிக்க**

**தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம் - 2018** 0.5

**துவக்கம்**

- மத்திய அரசாங்கம் லோக்பால் லோக் ஆயுக்தா சட்டம் 2013-யை நிறைவேற்றியதை தொடர்ந்து தமிழ்நாடு அரசாங்கம் ஜூலை 9, 2018-ம் ஆண்டு நிறைவேற்றியது

**நோக்கம்** 1

- முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களையும் உள்ளடக்கிய முன்னாள் மற்றும் இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அரசு ஊழியர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு நடவடிக்கை எடுப்பதை இச்சட்டம் நோக்கமாகக் கொண்டது. 3

**சிறப்பம்சங்கள் :**

- மக்கள் குறைதீர்க்கும் அமைப்பான தமிழ்நாடு லோக் ஆயுக்தா நிறுவப்பட்டது.
- தமிழக ஆளுநரால் நியமனம் செய்யப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டது.
- தேர்வுக்குழுவானது முதலமைச்சர், சட்டப்பேரவையின் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியின் தலைவர்களை உள்ளடக்கியது. மேலும் இதுவே லோக்ஆயுக்தாவின் உறுப்பினர் மற்றும் தலைவர்களை தேர்வு செய்யும்.
- இது ஒரு பகுதி நீதித்தன்மை கொண்ட அமைப்பாகும். மேலும், இது நிர்வாகம் மற்றும் நீதித்துறை செயல்பாடுகளை செய்கிறது.
- இது எந்த ஒரு நபரையும் ஆதாரங்களைப் பெறுவதற்காக அழைப்பு விடுக்கவும், சோதனை மேற்கொள்ளவும் அதிகாரம் கொண்டது.
- இது தனக்கென ஒரு புலனாய்வுப் பிரிவினைக் கொண்டுள்ளது
- இது ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

**முக்கியத்துவம்** 1.5

- அரசுப் பணியில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அலுவலர்களுக்கு எதிராக கொடுக்கப்படும் பொதுமக்களின் குறைகளை வேகமாக தீர்க்கிறது.
- இது ஊழல் குற்றச்சாட்டுகள், அதிகாரத் துஷ்பிரயோகம் அல்லது முறையற்ற நிர்வாகம் அல்லது மாநில அளவில் பொது செயல்பாட்டாளர்களுக்கு எதிரான ஒற்றுமையின்மை போன்றவற்றை ஆய்வு செய்கிறது. மேலும், அதன்மீதான பரிந்துரைகளை அளிக்கிறது.

**3) சமூக அபிவிருத்தித் திட்டத்தின் குறுகிய மற்றும் நீண்ட கால நோக்கங்களை வகைப்படுத்துக.**

**சமூக மேம்பாட்டுத் திட்டம்**

SURESH

**குறைந்த கால நோக்கங்கள்**

1. அதிகரிக்கப்பட்ட வேளாண் உற்பத்தி **3**
2. கிராமங்களில் காணப்படும் வேலைவாய்ப்பின்மை பிரச்சனையை தீர்த்தல்
3. கிராமங்களில் தகவல் தொடர்பினை மேம்படுத்துதல்
4. ஆரம்பக் கல்வியை மேம்படுத்துதல்
5. கிராமங்களில் பொது சுகாதாரத்தினை மேம்படுத்துதல் மற்றும் இடஒதுக்கீடு அளித்தல்
6. தொழிற்சாலைகள் மற்றும் தனித்துவமான கைவினைப் பொருட்களை ஊக்குவித்தல்

**நீண்டகால நோக்கங்கள்** **3**

1. அனைத்து புவியியல் மற்றும் மனித வளங்களை திட்டமிட்ட முறையில் முழுவதுமாக மேம்படுத்துதல்
2. முழு வேலைவாய்ப்புடன் கிராமங்களை உருவாக்குதல்
3. கிராமங்களை சமுதாய, நன்னெறி சார்ந்த மற்றும் பொருளாதாரத்தில் மேம்படுத்துதல்
4. அரசாங்கத்தை ஒருங்கிணைந்த வகையில் மேம்படுத்தல்
5. கிராமப்புற கல்வியாளர்களின் ஆர்வம்.
6. பொருளாதார வளர்ச்சி
7. சமூக மாற்றம்
8. ஜனநாயக வளர்ச்சி

**4) சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கியத்துவத்தை பற்றியும் அதன் விமர்சனம் பற்றியும் எழுதுக.**

**சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் முக்கியத்துவம்** **3**

**1. வேளாண்மை மற்றும் அது தொடர்புடைய தொழில்துறைகள்**

- புதிய மற்றும் தரிசாக விடப்பட்ட நிலங்களின் மறுபிரயோகம்
- காய்கறிகள் மற்றும் தாவரங்கள் வளர்த்தல் போன்றவை
- நிலையான வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, பங்கெடுத்தல் திறன் அதிகரித்தல்

**2. நிர்வாக கட்டமைப்பை மேம்படுத்துதல்**

- கூட்டுறவு சங்கங்கள், சங்கங்கள், பல்பயன்பாட்டு சங்கங்களுக்கான நிர்வாகம்

**3. கல்விக்கான முக்கியத்துவம்**

- ஆரம்பக்கல்வி மற்றும் வயது வந்தோர் கல்விக்கு முக்கியத்துவம்

**4. வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்**

- சிறிய மற்றும் குடிசைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துதல்

**5. மேம்பட்ட சுகாதார வசதிகளை உறுதி செய்தல்**

- பிரசவம் சார், மருத்துவ வசதி மற்றும் குழந்தைகள் நலம்

**6. பரந்து விரிந்த தொலைத்தொடர்பு**

- புதிய கட்டமைப்புகள் மற்றும் போக்குவரத்துக்கான வழிமுறைகள்
- குழுச் செயல்பாடு
- ஒருங்கிணைத்தல்
- சுதந்திரம் மற்றும் வலுத்தன்மை
- சமத்துவம் மற்றும் உள்ளடக்கம்
- பங்களிப்பு
- குழு அதிகாரம்

**விமர்சனங்கள்** **3**

- மக்களின் குறைவான பங்களிப்பினால் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை
- இடைமட்ட அளவிலான திட்டமிடலுடன் தொடர்பில்லை.
- ஊரகப் பகுதிகளை புறக்கணித்த இடம்சார் மேம்பாடுகள்
- பயனாளிகளிடம் மகிழ்ச்சியின்மை மற்றும் நம்பகத்தன்மையின்மை
- வசதிபடைத்தவர்களின் மேலாதிக்கம்
- ஊரகப்பகுதிகளில் குறைந்த அளவிலான ஒத்துழைப்பு
- அதிகார வர்க்கத்தை மட்டுமே சார்ந்து செயல்பட்டது. பொதுமக்களின் பங்களிப்பு இல்லை

**5) அரசு சாரா நிறுவனங்கள் என்றால் என்ன? இதன் வகைகள் மற்றும் பண்புகளை பட்டியலிடுக.**

**அரசு சாரா நிறுவனங்களின் வரையறை** **2**

- அரசு சாரா நிறுவனம் என்பது ஒரு குழுவாக இருந்து அரசாங்கத்தை சாராமல் சுயமாக செயலாற்றும் நிறுவனங்கள் ஆகும்.
- உலக வங்கி – லாபம் சாரா நிறுவனங்கள் என்று வரையறுக்கிறது.
- உதாரணம் : அம்னிஸ்டி இண்டர்நேஷனல், குழந்தைகளை பாதுகாக்கும் இயக்கம்

**வகைகள்** **1**

**1. செயல்படும் அரசு சாரா நிறுவனம்**

- தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள்.
- உதாரணம் : உலக வன உயிரி நிதியம்

**2. பரிந்து பேசும் அரசுசாரா நிறுவனம்**

- கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளில் ஆதிக்கம் செலுத்துகிறது.

SURESH

- உதாரணம் : சிவப்பு இளம் பிறைச்சங்கம்

**பண்புகள் :** 3

1. குடிமக்கள் பங்களிப்புக்கான கூறுகளை உள்ளடக்கிய தன்னார்வலர்கள்
2. சமுதாயத்தின் சட்டத்திற்கு உட்பட்ட சுதந்திர அமைப்புகள்
3. லாப நோக்கத்திற்கான செயல்பாடுகள் கிடையாது.
4. சுயசேவை நோக்கமாகக் கொண்டது.
5. மக்களின் வாய்ப்புகள் மற்றும் சுற்றுச்சூழலை கொண்டுள்ளது.
6. அடிமட்ட அளவில் செயலாற்றுகிறது.
7. விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
8. மனித உரிமைகளை பாதுகாத்தல்
9. மீட்டுருவாக்கத்தை ஊக்கப்படுத்துதல்
10. பாதுகாப்பு சூழல்

**6) பெண்கள் நலனில் அரசு சாரா நிறுவனங்கள் பங்களிப்பை மதிப்பீடு செய்க** 3

- பெண்களுக்கான சொத்துரிமை மற்றும் சட்டப்பூர்வமான விழிப்புணர்வை உருவாக்குதல்
- கடன் / சிறுகடன்/ சுயஉதவிக் குழுக்களாக செயல்படுகிறது.
- பெண்களுக்கான திறன் மேம்பாட்டில் பங்கேற்பு
- பெண்களின் மேம்பாட்டிற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு துணைபுரிகிறது.
- உயர்ந்தபட்ச வளங்களுக்கான அணுகல்கள்
- தனிப்பட்ட மற்றும் வேலைவாய்ப்புகளில் மகிழ்ச்சி மற்றும் நிலையான தன்மை
- உதாரணம் : சுயதொழில் பெண்கள் இயக்கம்
- பெண்களின் பங்களிப்பின் சிறப்புத் திட்டங்கள். உதாரணம் : பெண்களுக்கான படிகள் மேம்பாட்டு நிறுவனம் புதுக்கோட்டை, தமிழ்நாடு
- பாலின சமத்தவத்திற்கு ஆதரவாக ஈடுபடுவது. உதாரணம் : ஹங்கர் ப்ராஜக்ட் (புதுடெல்லி)

**குறைபாடுகள்** 3

- செயல்திட்டங்களைத் தவிர உண்மை மட்டத்தில் உத்வேகம் அளிப்பதில்லை
- அரசாங்கத்தின் பங்களிப்புகளுக்கு முக்கியத்துவம் தேவை
- அரசு சாரா நிறுவனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
- பெரும்பான்மையான அரசு சாரா நிறுவனங்கள் ஆண் நிர்வாகிகளால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது.
- பல்வேறு துறைகளில் செயல்படுவதற்கான குறைவான பன்முகத் தன்மை
- பெரும்பான்மையான பெண்களுக்கு அரசு சாரா நிறுவனங்கள் பற்றிய பயன்பாடுகளின் விழிப்புணர்வு இல்லை

**7) சந்தானம் கமிட்டி பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

**சந்தானம் ஆணையம்** 1

**துவக்கம் :**

- ஊழலுக்கு எதிரான ஆணையத்திற்கு 1962-ம் ஆண்டு சந்தானம் அவர்கள் தலைமையில் குழு ஒன்றை லால் பகதூர் சாஸ்திரி நியமித்தார்.
- இது இந்திய ஊழலுக்கு எதிரான இயக்கத்தின் வரலாற்றில் முக்கியமான ஆவணமாக திகழ்கிறது.

**நோக்கம்** 1

- இது மத்திய அரசின் அனைத்து துறைகள் மற்றும் அனைத்து நிறுவனங்களின் ஊழலுக்கு எதிராக போரிடுகிறது.
- ஊழலுக்கு எதிரான சட்டங்களை நிறுவுதல்
- அரசாங்கத்தின் நிதிகளை முறையில்லாமல் பயன்படுத்துவதை கண்டறிதல் மற்றும் தடுத்தல்

**முக்கிய பரிந்துரைகள்** 3

- ஊழல் செயல்பாடுகளை இறுக்கமான சட்டங்களால் மட்டுமல்லாமல் அத்தகைய சட்டங்களை மறுசீரமைத்தல் மூலமாக கையாளுதல்
- அரசாங்கத்தின் அனைத்து துறைகள் மற்றும் முக்கியமான நிறுவனங்களில் நிர்வாக ஊழல் தடுப்பு பிரிவுகள் மற்றும் மத்திய விழிப்புணர்வு ஆணையத்தை நிறுவுதல்
- குற்றவியல் நீதித்துறைகளில் மாற்றங்களை பரிந்துரைத்தல்
- ஊழல் தடுப்புச் சட்டம் 1947-ன் கீழ் அபராத நிலையை உயர்த்துதல்
- வழக்குகளின் விசாரணை காலம் 2 முதல் 5 ஆண்டுகளைத் தாண்டாத அளவிலான கால நிர்ணயம்
- அரசாங்கத்தை ஏமாற்றும் அரசு அலுவலர்களுக்கு எதிரான இறுக்கமான நடவடிக்கைகள்

**வெளிப்பாடுகள்** 1

- இந்தியாவில் ஊழல் தடுப்பு எதிரான புதிய சட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியது.

- ஊழலை கையாளுவதற்கான புதிய நிறுவனங்களை உருவாக்குவதற்கான அடிக்கல் நாட்டியது.

**8) பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டம் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக**

**<u>பிரதம மந்திரி கௌசல் விகாஷ் யோஜனா</u>**

**<u>துவக்கம்</u>** 1

- இந்திய அரசாங்கத்தின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான அமைச்சகத்தால் 2015-ம் ஆண்டு துவங்கப்பட்டது.

**<u>நோக்கம்</u>** 1

- 300-க்கும் அதிகமான திறன் மேம்பாட்டு பாடங்கள் மூலமாக இந்திய இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தி அதிகாரமளித்தல்.
- நாட்டின் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து அதன் மூலம் தொழில்துறை சார்ந்த திறனை வளர்த்து அவர்களை வெற்றியடையச் செய்தல்.

**<u>செயல்பாட்டு நிலைகள்</u>** 1.5

1. திட்டம் 1.0 (2015-16) : இலவச மற்றும் குறைந்தகால திறன் பயிற்சிகள் அளித்தல் மேலும், பணம் சார்ந்த வெகுமதிகளை இளைஞர்களுக்கான திறன் சான்றிதழுக்காக வழங்குதல்
2. திட்டம் 2.0 (2016-2020) : திட்டம் 1.0 மற்றும் திட்டம் 2.0 -ன் கீழ் இளைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட தரத்தினாலான திறன் சார்ந்த சுற்றுச்சூழலை நாட்டில் உருவாக்கி அதன் மூலம் பயிற்சி அளித்தல்
3. திட்டம் 3.0 (2020-21): நடைமுறையில் உள்ள திறன்சார் பயிற்சிகளின் மேல் இளைஞர்களுக்கு அறிவிக்கப்பட்ட வாய்ப்புகள் மூலம் சுற்றுச்சூழலை உருவாக்குதல்.

- இளைஞர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி மற்றும் சான்றிதழ்களில் துணையாக இருத்தல், தனியார் துறைகளில் பெருமளவிலான பங்களிப்புக்காக நிலைத்த திறன் மையங்களை மேம்படுத்துதல்.

**<u>முக்கியத்துவம்</u>** 2.5

- பயிற்சி அளிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி பட்டாளத்தை உருவாக்குதல்.
- இது அதிகளவில் பயிற்சியாளர்களையும் கற்பதை மையமாகக் கொண்டு விளங்கும்.
- தொழிற்சாலைகளுடன் இணைக்கப்பட்ட வாய்ப்புகள் மீது தொடக்க அளவில் இளைஞர்களுக்கு வாய்ப்பளிப்பதில் தொழில்சார் செயல்பாட்டாளர்களாக விளங்கும்.
- இந்திய அனுபவமுள்ள இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் திறன் மற்றும் தொழிலக எதிர்பார்ப்புகளுக்கிடையே பாலமாக விளங்குகிறது.
- கல்லூரி அல்லது பல்கலைக்கழகங்களில் இடைநிற்றல் மேற்கொண்ட மாணவர்கள் மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தொழில்சார் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் வேலைவாய்ப்பிற்கு உகந்தவர்களாக மாற்றுதல்.

**9) பள்ளி கல்வி மீதான கோவிட் - 19ன் மிகப்பெரிய தாக்கம் என்ன? அரசு அதை எவ்வாறு கையாண்டு வருகின்றது?**

**<u>பள்ளிக் கல்வியின் மீது கோவிட்-19-ன் முதன்மையான தாக்கங்கள்</u>** 1

- முதன்மையான தாக்கம் என்னவென்றால், பள்ளி மாணவர்கள் பள்ளிகள் மூடப்பட்டதால் கல்வியை தொடர இயலவில்லை. மேலும் 8 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் தங்களது வாசிக்கும், எழுதும் திறன்களை பள்ளிகள் மூடப்பட்டதால் ஏற்பட்ட கற்றல் இடைவெளிகளால் இழக்கத் தொடங்கினர்.
- 2020 - 21ஆம் கல்வியாண்டில் தமிழகத்தில் பள்ளி செல்லும் குழந்தைகளில் 600 பேருக்கு திருமணமானது கண்டறியப்பட்டுள்ளது.

**<u>தமிழக அரசாங்கத்தின் தீர்வுகள்</u>** 2.5

**<u>1. 8 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான இல்லம் தேடிக் கல்வித் திட்டம்</u>**

- இத்திட்டமானது அக்டோபர் 2021-ம் ஆண்டு துவங்கப்பட்டது. மேலும் நாட்டின் மிகப்பெரிய மற்றும் முதலாவது பெருந்தொற்றிற்கு பிந்தைய கல்வி அளிப்புத் திட்டமாகும்.
- பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட பொதுமுடக்கக் காலங்களில் ஏற்பட்ட கற்றல் இடைவெளிகளில் மாணவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வண்ணம் ஏற்படுத்தப்பட்டது.
- இணைய வகுப்புகளுக்கு பொருந்தாத நபர்களுக்காக மேலும் இத்திட்டமானது குழந்தைகளின் வீட்டிற்கு கல்வியை கொண்டுசெல்லும் திட்டமாகவும் கருதப்படுகிறது.

**<u>2. 8 வயதிற்கு உட்பட்ட மாணவருக்காக எண்ணும் எழுத்தும் திட்டம்</u>** 2.5

- 8 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு கொரோனா பெருந்தொற்று காலத்தில் கற்றல் இடைவெளியை குறைத்து அடிப்படைக் கல்வியான கூட்டல் மற்றும் கழித்தல் மற்றும் அடிப்படை இலக்கணம் போன்றவற்றை கற்பித்தல்.

SURESH'

- திருவள்ளூர் மாவட்டத்தில் அழிஞ்சிவாக்கம் பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியில் ஒரு நிகழ்ச்சியில் இது துவங்கப்பட்டது.
- 2025-ம் ஆண்டில் அடிப்படை கல்வி மற்றும் எண்ணறிவு போன்றவற்றை உறுதி செய்வதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டது.
- திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அழிஞ்சிவாக்கம் பஞ்சாயத்து தொடக்கப் பள்ளியில் முதன்முதலாக துவங்கப்பட்டது.

**10) எண்ணும் எழுத்தும் திட்டம் சிறுகுறிப்பு எழுதுக**

**எண்ணும் எழுத்தும் திட்டம்** 0.5

**தொடக்கம்**

- திருவள்ளூர் மாவட்டத்தின் அழிஞ்சிவாக்கம் பகுதியில் இத்திட்டமானது துவக்கப்பட்டது.

**நோக்கம்** 1

- 8 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு பள்ளிகள் மூடப்பட்ட காலத்தில் ஏற்பட்ட கற்றல் இடைவெளிகளை குறைப்பதற்காக பாலமாக செயல்படுவது
- 2025-ம் ஆண்டிற்குள் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியலறிவினை உறுதி செய்தல்.

**செயல்பாடு** 2

- 8 வயதிற்குட்பட்ட தமிழ்நாட்டின் அனைத்து மாணவர்களும் கட்டுரைகளை வாசிக்க இயலும் நிலை
- மாணவர்களுக்கான அடிப்படை எண்ணியலறிவு
- இத்திட்டமானது 2022-23 கல்வியாண்டுகளில் தமிழகத்தின் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்.
- நிலை அடிப்படையிலான ஒருங்கிணைந்த செயல்படுத்துகையை விரும்பியது.

**கற்றல் மொழி** 1

- 1 முதல் 3 வகுப்பு வரை உள்ள நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்படுகிறது.
- தமிழ், ஆங்கிலம், கணிதம், சுற்றுச்சூழல் அறிவியல்

**படிநிலைகள்**

- அரும்பு
- மொட்டு
- மலர்

**முக்கியத்துவம்** 0.5

- 2025-ம் ஆண்டிற்குள் தமிழகத்தின் அனைத்து அரசுப்பள்ளி மாணவர்கள் கட்டுரையை வாசிக்கவும் மற்றும் அடிப்படை எண்ணியல் திறன்களை கொண்டிருக்கவும் வேண்டும்.

**11) சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் அம்சங்கள் யாவை?**

**சர்வ சிக்ஷா அபியானின் சிறப்பம்சங்கள்** 6

1. அனைவருக்குமான ஆரம்பக் கல்வியை அடைதல்
2. 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தையின் அடிப்படை உரிமையான கட்டாய மற்றும் இலவசக் கல்வியை வழங்குதல்.
3. பள்ளிக்கூட வசதிகள் இல்லாத குடியிருப்பு பகுதிகளில் புதிய பள்ளிகள் துவங்குதல்
4. நடைமுறையில் உள்ள பள்ளிக்கட்டமைப்பை வலுப்படுத்துதல்
5. மாற்றுப்பள்ளிக்கான வாய்ப்புகள்
6. புதிய பள்ளிக்கூடங்களை கட்டுதல்
7. குழந்தைகளுக்கு இலவச பாடப்புத்தகம் மற்றும் சீருடைகள்
8. மாணவர்களுக்கு தரமான கல்வியுடன் மேம்பட்ட திறன் அளித்தல்
9. மாநில அரசாங்கங்களுடன் மத்திய அரசாங்கத்தின் பங்களிப்புகள்
10. 86-வது அரசியலமைப்புத் திருத்தம் 6 முதல் 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கான கட்டாயக் கல்வி
11. தேசிய கல்விக்கொள்கை 2020- 2 கோடி பள்ளிக் குழந்தைகளை புதிதாக சேர்த்தல்
12. சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தினை கண்காணிக்க சகுன் எனும் அரசாங்க இணையதளம் நிறுவப்பட்டது.

**12) தேசிய ஊட்டச்சத்து இயக்கம் என அறியப்படுவது எது?**

**தேசிய ஊட்டச்சத்து இய்க்கம்** 0.5

**துவக்கம்**

- இந்திய அரசாங்கத்தால் 2018-ம் ஆண்டு துவங்கப்பட்டது.
- சட்டம் – DPSP விதி 47 ஊட்டச்சத்து அளவை உயர்த்துதல்

**நோக்கம்** 0.5

- இந்தியாவில் உள்ள ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சனையை சமாளித்தல்

**குறிப்பிட்ட இலக்குகள்** 2

- வருடாந்திரம் 2% ஊட்டச்சத்து வளர்ச்சி குன்றிய நிலையை கட்டுப்படுத்துதல்
- வருடாந்திரம் 2% எதிர் ஊட்டச்சத்து நிலையை குறைத்தல்
- வருடாந்திரம் இரத்த சோகையை 3% குறைத்தல்
- வருடாந்திரம் குறைந்த எடை பிறப்பினை 2% குறைத்தல்

**முக்கிய சிறப்பம்சங்கள்** 3

- ஊட்டச்சத்து குன்றிய நிலையை குறைத்தல் மற்றும் வலுவான ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்
- 2022-ம் ஆண்டுகளில் ஊட்டச்சத்து குறைந்த நிலையை குறைத்தல் மற்றும் பல்வேறு அமைச்சகம் முன்முயற்சிகள் மேற்கொள்ளுதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டது.
- பல்வேறு பிரிவுகள் மற்றும் துறைகளுக்கிடைய அறிவியல்பூர்வமான தொழில்நுட்பம் மற்றும் உரையாடல்கள்
- பல்வேறு திட்டங்களுக்கான வரைபடங்களை உள்ளடக்கியது.
- மத்திய மற்றும் மாநில அரசாங்கத்தின் செலவின பகிர்மானம் 80:20
- ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைவதை உறுதியாகக் கொண்டது.

**13) ஜனனி சிசு சுரக்ஷா காரியக்ரம் எனும் திட்டம் எவ்வாறு கர்ப்பிணிப் பெண்களின் ஊட்டச்சத்து குறைவு பிரச்சனைக்கு எதிராக போராடியது என்று விளக்குக.**

**ஜனனி சிசு சுரக்ஷா காரியக்ரம்**

**துவக்கம்** 1

- இந்திய அரசாங்கம் 1 ஜூன், 2011-ம் ஆண்டு துவக்கியது.
- இது தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் ஒரு பாதுகாப்பான தாய்சேய் நலனை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

**நோக்கம்** 1

- மகப்பேறு மற்றும் குறைப்பிரசவ இறப்புகளை நிறுவன மகப்பேறு நிலையங்கள் மூலம் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு அளிப்பதன் மூலமாக குறைத்தல்.
- மகப்பேறிற்காக அரசாங்கத்தின் சுகாதார வசதிகளை அணுகும் கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவசார் உதவிகளை வழங்குதல் மற்றும் ஆதரவளித்தல்

**பெண்களுக்கான இலவச வழிவகைகள்** 1

1. இரத்தம் ஏற்றுதலுக்கான வழிவகைகள்
2. பரிசோதனை
3. பயனாளர் கட்டணத்திலிருந்து விதிவிலக்கு
4. சிகிச்சை

**முக்கிய சிறப்பம்சங்கள்** 3

- ஏழை கர்ப்பிணிப் பெண்கள் எந்த செலவினமும் இல்லாமல் முழுவதும் இலவசமாக அரசு சுகாதார நிலையங்கள் மூலமாக மகப்பேறு நிகழ்வதை உறுதி செய்தல்.
- இலவச உட்கொள்ளும் மருந்துகள்
- வீடுகளிலிருந்து மகப்பேறு நிலையங்கள் வரை இலவச போக்குவரத்து வசதி

**14) டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டம் பற்றி விளக்குக.**

**முத்துலெட்சுமி மகப்பேறு நிதி உதவித்திட்டம்**

**துவக்கம்** 0.5

- 1987ம் ஆண்டு தமிழக அரசாங்கத்தால் துவங்கப்பட்டது

**நோக்கம்** 0.5

- 19 வயதிற்கு மிகுதியான ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறின் போது நிதி உதவி வழங்குதல்.

**நிதி உதவி** 1

- 7 தவணைகளில் மொத்தம் ரூ.18,000 நிதிஉதவி வழங்கும் திட்டம்

**சத்துணவு பெட்டகம்** 1

- தாய்மார்கள் ஊட்டச்சத்து கலவை
- இரும்பு சத்து மருந்து
- புரதச்சத்து பிஸ்கெட்
- பேரிச்சம்பழம்
- ஆவின் நெய்
- ஆல்பன்டஸ்சோல் மாத்திரைகள்

**திட்டத்தின் முக்கியத்துவங்கள்** 3

- 100% மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்களில் மகப்பேறு
- நிதி உதவி வழங்குதல்
- குழந்தைப் பேறு மற்றும் மகப்பேறு தொடர்புடைய பிரச்சனைகளை குறைத்தல்

**15) SHG ஐ வரையறு. மற்றும் அதன் பணிகள் மற்றும் நன்மைகளை பற்றி எழுதுக.**

**சுயஉதவிக்குழுக்கள்**

- கடன்கள் மற்றும் மானியங்கள் மூலம் நிதிகளைப் பெற்று கிராமப்புற பெண்களை தொழில்முனைவோராக மாற்றும் திட்டம்

**விளக்கம்** 1

- சுயஉதவிக் குழுக்கள் என்பதை தங்களின் வாழ்க்கைச் சூழலை மேம்படுத்துவதற்கான வழிகளுக்காக ஒன்றிணைந்து மக்களால் உருவாக்கப்படும் முறைசாரா அமைப்பாகும்.

- சுயஉதவிக் குழுக்கள் என்பவை சுயவேலைவாய்ப்பினை ஊக்குவிக்கவும் வறுமையை ஒழிக்கவும் முக்கிய பங்காற்றுகிறது.

**செயல்பாடுகள்** 2.5

- விளிம்பு நிலையில் உள்ள மற்றும் வறுமையில் உள்ள மக்களின் செயல்பாட்டுத்திறனை கட்டமைப்பதிலும் வேலைவாய்ப்பு தொடர்புடைய தளத்திலும் மற்றும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்துகிறது.
- ஒட்டுமொத்த தலைமைத்துவம் மற்றும் பரஸ்பர விவாதங்களின் மூலம் முரண்பாடுகளை குறைக்கிறது. இவை இலவச கடன்களை சந்தை வழிகாட்டும் விகிதத்தின் அடிப்படையில் வழங்குகிறது.
- கட்டமைக்கப்பட்ட நிர்வாகங்களிடமிருந்து பெறப்படும் நிதி ஆதாரத்திற்கு இத்தகைய இக்குழுக்கள் ஒரு கூட்டு உத்தரவாத அமைப்பாக செயல்படுகிறது.
- ஏழைகளுக்கு குறு கடன் சேவைகளை அளிப்பதற்கு ஒரு திறமை வாய்ந்த இயந்திரமாக இவை செயல்படுகிறது.

**சுயஉதவிக்குழுக்களின் நன்மைகள்** 2.5

- இந்தியாவின் ஊரக வறுமைக்கு மிக முக்கிய பிரச்சனைகளில் ஒன்று, நிதி மற்றும் கடன்சார் சேவைகளை அணுகும் வாய்ப்பு குறைவாக உள்ளது.
- கிராமப்புறங்களில் கடன் சார்ந்த இணைப்பாக முக்கிய காரணங்களில் செயல்பட்டு வலிமையான சமுதாய உருவாக்கத்திற்கு காரணமாக விளங்குகிறது.
- இவை ஏழைகளுக்கு கடன் வழங்குவதில் உதவி செய்வதோடு வறுமையை ஒழிப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது.
- ஏழைகளுக்கு குறிப்பாக பெண்களுக்கு வலிமையான மூலதன கட்டமைப்பை உதவியாக அளிக்கிறது. இவை பெண்களுக்கு அதிகாரமளித்து சமுதாயத்தில் அவர்கள் குரல் ஓங்கச் செய்கிறது.
- நிதிசார் சுதந்திரத்தன்மை சுயவேலைவாய்ப்பு மூலம் அளிக்கப்படுவதால் மேம்பட்ட கல்வி நிலை, மேம்பட்ட சுகாதாரம் மற்றும் மிகவும் மேம்பட்ட குடும்பக் கட்டுப்பாடு போன்றவற்றை அடைய வழிவகைசெய்கிறது.

## அலகு - 2

1) **ஏன் ஊழல் நாட்டின் புற்றுநோய் என்று குறிப்பிடப்படுகிறது?**

**வரையறை** 1

- ஊழல் என்பது அதிகாரம் அல்லது அதிகார நிலையில் உள்ளவர்களில் நேர்மையற்ற மற்றும் சட்டவிரோத நடத்தை என வரையறுக்கப்படுகிறது
- ராபர்ட் ஜோலிக், ஊழல் என்பது ஏழைகளிடமிருந்து திருடி, ஆட்சி மற்றும் தார்மீகத்தை தின்று நம்பிக்கையை இழக்க செய்யும் ஒரு புற்றுநோய் என்று மேற்கோள் காட்டியுள்ளார்.

**இந்தியாவில் ஊழலின் பரவல்:** 0.5

- 2021ம் ஆண்டின் ஊழல் கருத்துகளின்படி இந்தியா 180 நாடுகளில் 85வது இடத்தில் உள்ளது.-2019 ஊழல் கணக்கெடுப்பின்படி 51% பேர் இலஞ்சம் கொடுத்ததை ஒப்புக்கொண்டனர்.

**இலஞ்சம் கொடுத்ததற்கு ஒப்புகொண்டவர்கள்:**

- ராஜஸ்தான் - 78% 0.5
- பீகார் - 75%
- தமிழ்நாடு - 67%

**ஏன் ஊழல் புற்றுநோய் என்று அழைக்கப்படுகிறது?** 3

- புற்றுநோய் செல் உடலில் வளர்ந்து வேகமாகப் பெருகி அதன் மூலம் புரவல உறுப்புகளை அழிக்கிறது
- இதேபோன்று ஊழல் அரசியலில் பெருகும்போது அது அரசின் அங்கத்தில் ஊடுருவி அழிக்கும் திறனை, வேகமாகவும், நயவஞ்சகமாகவும் கொண்டுள்ளது.
- ஒருமுறை உட்பொதிக்கப்பட்டால் அதை வெட்டுவது மிகவும் கடினம்

**தேசத்தில் ஊழலின் தாக்கம்** 4

**1. குறைவான நம்பகத்தன்மை**

- ஜனநாயகத்தை பலவீனப்படுத்துகிறது
- பொருளாதார வளர்ச்சியைத் தடைபடுத்துகிறது
- சமத்துவமின்மை, வறுமையை அதிகரிக்கிறது

**2. ஜனநாயக ஸ்தாபனத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துதல்**

- அரசாங்க ஸ்திரமின்மைக்கு பங்களிக்கிறது-மெதுவான பொருளாதாரம்

**3. குன்றிய பொருளாதார வளர்ச்சி:**

- அந்நிய நேரடி முதலீட்டை மட்டும் ஊக்கப்படுத்துகிறது
- தேவையான தொடக்க செலவுகளை சமாளிக்க இயலாது.

**4. ஜனநாயக அமைப்பின் அடித்தளத்தின் மீது தாக்குதல்**

- தேர்தல் செயல்முறைகளை சிதைக்கிறது
- சட்டத்தின் ஆட்சியைத் தடுக்கிறது

**ஊழலுக்கான நடவடிக்கைகள்:** 3

- ஊழலை தடுப்பதற்கான ஆணையம்
- எ.கா: சந்தானம் குழு, 1964

**ஊழலுக்கு எதிரான நிறுவனங்கள்**

- நிர்வாக கண்காணிப்பு பிரிவு (AVD)
- CBI & CVC (மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம்)- லோக்பால் & லோக் ஆயுக்தா

**சட்டங்கள்**

- ஊழலை தடுக்கும் சட்டம், 1988
- பினாமி பரிவர்த்தனை (தடை) சட்டம், 1988
- பணமோசடி தடுப்புச் சட்டம், 2002
- RTI சட்டம் 2005
- இந்நடவடிக்கையின் மூலம் நாட்டின் புற்றுநோயான ஊழலை ஒழிக்க முடியும்.

**2) ஊழல் ஒரு மிகப்பெரிய வியாதி; வெளிப்படைத் தன்மை அதற்கான மருந்து - இதற்கான அடிப்படையில் அரசின் முயற்சிகளை விளக்குக.** 1

- உலகில் ஊழல் மிகுந்த நாடுகளில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. ஊழல் புலனாய்வு குறியீட்டின்படி, 180 நாடுகளின் இந்தியா 40 மதிப்பெண்கள் பெற்று, உலகின் 85வது ஊழல் நிறைந்த நாடாக உள்ளது.
- போனோ மேற்கோள் காட்டியது போல், உலக சுகாதாரத்தில் ஊடுறுவும் ஊழல்தான் மிகப்பெரிய நோய். இருப்பினும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு என்ற தடுப்பூசியின் உதவியுடன் அதைக் குணப்படுத்த முடியும்.

**மருந்தாக வெளிப்படைத்தன்மை** 4

**1. நல்லாட்சியின் கொள்கை:**

- இது ஒரு ஜனநாயக அரசியலில் குடிமக்களுக்குப் பொறுப்புக் கூறலைக் குறிக்கிறது.
- நல்லாட்சி, ஊழலின் வேரை வெட்டுகிறது.

**2. தவறான நிர்வாகம் மற்றும் ஊழலுக்கு எதிராகச் சரிபார்த்தல்:**

- வெளிப்படைத்தன்மையின் முறையான மற்றும் முறைசாரா வழிமுறை பொது நலனுக்காகச் செயல்பட அரசு அதிகாரிகளை ஊக்குவிக்கிறது.

**3. ஊழலைக் கண்டறிவதற்கான நிகழ்தகவு அதிகரிப்பு:**

- வெளிப்படைத்தன்மை ஊழலைத் தடுக்கிறது.
- பிடிபடுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது.

**4. அரசாங்கத்தின் மீதான பொது நம்பிக்கை :**

- வெளிப்படைத்தன்மை மற்றும் திறந்த முறையில் இருப்பதால் அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை இருப்பதால் கீழ்க்காண்பவற்றை செயல்படுத்துகிறது.
- இது ஊழல் விகிதத்தை குறைக்கிறது

**வெளிப்படைத்தன்மையை நிலைநாட்ட அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:** 5

**அ) நிர்வாகத்தில்**

- தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மூலம் அரசாங்கம்
- மின் அலுவலகம்
- பயனுள்ள அரசு மற்றும் உள் அரசு பரிவர்த்தனை
- GEM
- அரசு இ-சந்தை

**ஆ) சட்டவிதிகள்:**

**1. தகவல் அறியும் உரிமை சட்டம் 2005**

- முக்கிய தகவலுக்கு பொது அணுகல் உரிமை
- ஊழலின் உயர் சுயவிவரத்தை சமாளிக்கிறது.

**உதாரணம்:**

- எம்பியின் வியாபம் ஊழல்

**2. இடித்துரைப்பாளர்கள் பாதுகாப்புச் சட்டம் 2014:**

- RTIக்கு சிறப்பு பாதுகாப்பு அளிக்கிறது. அரசாங்கத்தில் தவறு செய்யும் செயல்களை வெளிப்படுத்தும் செயல்பாட்டாளர்கள். அதிகாரப்பூர்வ ரகசியங்கள் சட்டம் 1923 போன்றது.

3. ஊழல் தடுப்புச் சட்டம் 1984, லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் 2013, இந்திய தண்டனைச் சட்டம் 1960 பிரிவு 169.

**இ) பொருளாதார மேம்பாடு:**

- GST
- வரி கட்டமைப்பு மற்றும் இ-வே பில்களை எளிமைப்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் இணக்கத்திற்கான செலவு குறைக்கப்பட்டது.
- மாநில எல்லையில் உள்ள சோதனைச் சாவடியின் தேவையை நீக்கி, ஊழலை குறைக்க வேண்டும்.

**ஈ) தேர்தல் சீர்திருத்தங்கள் : வெளிப்படுத்தல் விதிமுறைகள்:**

- உச்சநீதிமன்றத்தால் கட்டாயப்படுத்தப்பட்ட, அரசியல்வாதிகள் தங்கள் நிதி சொத்துக்கள், கல்வி மற்றும் குற்றவியல் பதிவுகள் பற்றி வெளிப்படுத்த வேண்டும்.

SURESH'

- இது வாக்காளர்களுக்கு அவர்கள் விருப்பத்தை தேர்ந்தெடுப்பதற்கு உதவுகிறது.

**முடிவு:** 2

- இந்த நடவடிக்கைகளின் பயன்பாட்டில், கோஃபி அன்னான் மேற்கோள் காட்டியது போல் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையை ஊழலுக்கு எதிராக தடுப்பூசியாகப் பயன்படுத்துகிறது
- ஊழல் ஒரு நோயாக இருந்தால், வெளிப்படைத்தன்மை அதன் சிகிச்சையின் இன்றியமையாத பகுதியாகும்.

**3) இந்தியாவில் சமூக அபிவிருத்தி திட்டம் - 1952. அவற்றின் தோற்றம் மற்றும் குறிக்கோளையும் எழுதுக?**

**CDP திட்டக் கமிஷன்** 1

- சமூக மேம்பாட்டுத் திட்டத்தை மக்களின் முயற்சியின் மூலம் கிராம வாழ்க்கையில் சமூக மற்றும் பொருளாதார மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சி என வரையறுத்துள்ளது.
- இது இந்தியாவின் 2/3 பங்கு மக்கள்தொகைக்கு நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியின் மகாசாசனம் என்று விவரிக்கப்பட்டுள்ளது.

**CDPன் தோற்றம்** 3

- ஆங்கிலேயர் ஆட்சியின்போது, இந்திய அரசாங்கச் சட்டம் 1935 செயல்படுத்தும்போது கிராமப்புற மேம்பாடு ஒரு முக்கியமான திட்டமாக சேர்க்கப்பட்டது.
- இரண்டாம் உலகப்போர் மற்றும் 1943ஆம் ஆண்டு வங்காளப் பஞ்சம் வெடித்ததால், உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது.
- அதிக உணவுப் பிரச்சாரம் தொடங்கப்பட்டது.
- ஆனால் அது வரையறுக்கப்பட்ட நோக்கத்தைக் கொண்டிருந்தது.
- 1948இல் எட்வர் திட்டத்தின் மூலம் முன்னோடி சமூக மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது.
- பின்னர் 1952இல் இந்திய அரசாங்கம் 300 கிராமங்கள் அல்லது 2 லட்சம் மக்களை உள்ளடக்கிய 55 சமூக மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்கியது.
- வறண்ட பகுதிகள் உட்பட பெரிய பகுதிகளை உள்ளடக்கும் வகையில் தேசிய விரிவாக்க சேவை 1953இல் தொடங்கப்பட்டது.
- 60000 முதல் 70000 வரை மக்கள் தொகை கொண்ட 150 முதல் 170 சதுரமைல்கள் கொண்ட 100 கிராமங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**CDPஇன் நோக்கங்கள்** 8

**a) பொருளாதார மேம்பாடு**

- மக்கள் தங்கள் வருமானத்தை அதிகரிக்கவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உதவுகிறது

**b) உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்**

- கிராம மக்களின் வீடு மற்றும் குடும்ப வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துகிறது

**c) கல்வியை மேம்படுத்துதல்**

- குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு கல்வி வசதிகளை வழங்குதல்
- புத்துணர்ச்சிக்கான (பொழுதுபோக்குக்கான) வசதிகளை மேம்படுத்துகிறது.

**d) திட்டமிடலில் உதவி**

- திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளில் உதவி.

**e) தேசிய புனரமைப்பில் கிராம மக்களை ஈடுபடுத்துதல்**

- மக்களை சுயசார்பு மற்றும் தன்னம்பிக்கை கொண்டவர்களாக ஆக்குதல்.

1. கிராமத்தின் புறத்தோற்றத்தை மாற்றுதல்
2. குழுக்களின் திறன்வளர்ப்பு
3. பெரிய குழுக்களின் திறன்
4. சமூக மூலதன உருவாக்கம்
5. பங்கெடுப்பு திட்டம்
6. மொழி மீட்டுருவாக்கம்

**f) அரசியல் சிந்தனை**

- கிராம மக்களுக்கு நிர்வாக நடவடிக்கைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.
- ஜனநாயகம் மற்றும் குடிமை விவகாரங்களின் நடைமுறைச் செயல்பாடுகளில் பயிற்சி பெற்றவராகின்றனர்.

**ஆ) சிந்தனையை மாற்றுதல்**

- அனைத்து கிராம மக்களின் பார்வையையும் மாற்றுதல்
- பதிலளிக்கக்கூடிய கிராமத் தலைமை, கிராம அமைப்பு மற்றும் நிறுவனங்களை உருவாக்குதல்

**h) கிராம கைவினைப் பொருட்கள் மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துதல்**

- தற்போதுள்ள கிராம கைவினைப்பொருட்கள் மற்றும் தொழில்களை மேம்படுத்துதல்
- புதியவற்றை ஒழுங்கமைத்தல்

SURESH

- குறைந்தபட்ச சுகாதார சேவைகளை வழங்குதல் மற்றும் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்துதல்
- இவையே சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களாகும்.
- இவற்றை மீட்பின் சான்று / சாட்சி என கருதுகின்றனர்.

**4) மகளிர் தொழில் முனைவோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?**

**பெண் தொழில் முனைவோர்:** **0.5**

- லாபம் ஈட்டுவதன் நோக்கம் கொண்டு ஒரு நிறுவனத்தை உருவாக்கி, நிர்வகித்து அவற்றை நடத்தும்திறன் மற்றும் ஆர்வம் கொண்ட பெண்ணை பெண் தொழில் முனைவோர் என்று வரையறுக்கலாம்.

**இந்தியாவில் பெண் தொழில் முனைவோரின் தற்போதைய நிலை:** **1**

- 2014 ன் ஆறாவது பொருளாதார கணக்கெடுக்கின்படி, 14 சதவீத இந்திய பெண்கள் மட்டுமே சுயமாக ஒரு தொழில் நிறுவனத்தை நடத்துகிறார்கள்.
- 90 சதவீதம் நிறுவனங்கள், சிறுகுறு தொழில்களாக பெண்களால் நடத்தப்படுகிறது.
- 79 சதவீதம் சுயநிதிகளாக நடத்தப்படுகிறது.
- 2018ன் பெண் தொழில் முனைவோர்களின் முதன்மை அட்டை குறியீட்டாளர்களின்படி இந்தியாவானது 52/57 என்ற நிலையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- பெண் தொழில் முனைவோர்கள் அதிகமான சவால்களை மேற்கொள்வதால் குறைந்த அளவிலான திறன் வீதத்தை வெளிப்படுத்துகிறது.

**பெண் தொழில்முனைவோரின் சவால்கள்:** **10.5**

**1. பாலின வேறுபாடு : ஆண் மைய சமூகம்:**

- இந்திய தொழில்முனைவோருக்கான சுற்றுசூழல் அமைப்பு இயற்கையில் ஆண்களை மையப்படுத்தி உள்ளது.
- இங்கு பெண் தொழில் முனைவோர்கள் குறைந்த வருவாய் துறையில் செயல்படுகின்றனர்.
- உற்பத்தி, அரசியல், போன்ற இலாபகரமான துறைகளில் ஆண்களின் கட்டுப்பாடு அதிகமாக உள்ளது.

**2. ஆதரவு இல்லாமை**

- பெண் தொழில்முனைவோருக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசகர்கள் குறைவு.
- உயர்மட்ட வணிகத்தில் 48 சதவீத பெண் தொழில் முனைவோர்களுக்கு குறைவு ஆதரவு.

**3. நிதிபற்றாக்குறை:**

- பெண் தொழில்முனைவோர்களை, குடும்ப நபர்கள் ஊக்கப்படுத்துவது இல்லை.
- பயோகான் நிறுவனர் கிரண் மசூம்தார், தொழிலில் நிதி சார்ந்த பல பிரச்சனைகளை சந்தித்துள்ளார்.

**4. இணைப்பின் அளவு அதிகரித்தல்:**

- தொழில்முறை வலைப்பின்னல் அணுகல் இல்லாமை
- கூகுள் பெயின் கணக்கெடுப்பின்படி, பெண் தொழில்முனைவோர்கள் முறைசார் மற்றும் முறைசாரா தொழிலில் குறைவாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.
- போதுமான இணைய மேம்பாடு வசதியின்மையால் 45% குறு வணிகர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

**5. பெண்கள் பயணம் மேற்கொள்ள கட்டுப்பாடு**

- சொந்த குடும்ப உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படுவதால், பல நகரங்கள் / நாடுகளுக்கு பயணம் செய்ய முடிவதில்லை.
- பெண்களால் தொடங்கப்பட்ட முயற்சியென்றாலும், குடும்பத்துக்கான வீட்டுப் பொறுப்புகளை கைவிட முடியாது

**6. திறன் மேம்பாடு மற்றும் சவால்களை மேம்படுத்துவது**

- கல்வி இல்லாமை- படிப்பறிவு இல்லாத மற்றும் பாதி கல்விபெற்ற பெண் தொழில்முனைவோர்கள் பல சவால்களை சந்திக்கின்றனர்.
- 2011 கணக்கெடுப்பின்படி, தேசிய மொத்த கல்வியறிவு 74.04% இருக்கையில், பெண் கல்வியறிவு வீதம் 64.6% சதவீதமாக உள்ளது.
- எ.கா. 2016 இல் தொடங்கப்பட்ட மகிளா – இ – ஹீட் திட்டம், பெண் தொழில் முனைவோர்கள் தங்கள் பொருட்களை விற்பதற்கு ஒரு தளம் உருவாக்கப்பட்டது.

**7. ஆண் தொழில் முனைவோர்களிடமிருந்து கடும்போட்டி:**

- நவீன பொருளாதார சூழல் மற்றும் சந்தை நிலை, தொழில் போட்டிகளை உருவாக்குகிறது.
- தன் தொழிலை நடத்துவதற்கு குறைந்த வளங்களை உபயோகப்படுத்திய போதிலும், தொழில்முனைவோர்கள் நிறைய வெளியீட்டை வழங்குவதற்கான தேவையும் உள்ளது.

**8. தகவல் இல்லாமை:**

- கல்வியறிவு குறைவாக உள்ளதால், போதிய விழிப்புணர்வு இல்லாமல் உள்ளது.

- வாத்வானி நிறுவனத்தால் பெண் தொழில்முனைவோருக்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தை அளித்தது.

**9. சார்ந்திருத்தலின் சவால்கள்:**

**அ) கலாச்சாரம் மற்றும் குடும்ப உறவுகளின் பின்னல்கள்:**

- ஆண்களை போல பெண்களால் முடிவெடுக்க இயலாத நிலை
- கலாச்சார தடுப்புகள், பெண்கள் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியுடனும் செல்ல அனுமதிப்பதில்லை.
- எ.கா: நைக்கா நிறுவனர், ஃபால்குனி நாயர், நிதித்துறையில் 25 வருட அனுபவத்திற்கு பிறகு Nykaa.com ஐ உருவாக்கினார்.

**ஆ) உணர்திறன்:**

- பெண்கள், பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்த ஆளாகின்றனர்.
- தொழில் முனைவோர் அவற்றை நடத்தும்போது பலவீனமான உணர்ச்சிகள் தோல்வி மற்றும் ஏமாற்றங்களை பொருத்து கொள்ளாத சூழல் ஏற்படுதல்
- இத்திருப்பம் செயல்பாட்டின் திறனை பாதிக்கிறது.

**முடிவு:**

- இந்த சவால்களை பெண் தொழில் முனைவோர்கள் எதிர்கொள்வதன் மூலம், 2030 க்குள் 30 மில்லியன் பெண்களால் 150 – 170 மில்லியன் சுய தொழில்களை வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5) ராமமூர்த்தி கல்விக்குழு மற்றும் அவற்றின் பரிந்துரைகள் பற்றி விளக்கி எழுதுக.**

**ராமமூர்த்தி கல்விக்குழு** 1

**தோற்றம்:**

- தேசிய கல்வி கொள்கைக்கான மறுஆய்வுகுழு ஆகும்.
- ஆச்சார்ய ராமமூர்த்தி அவர்களால் தலைமை தாங்கப்பட்டது.
- இந்தக்குழு மே7, 1990 இல் நியமிக்கப்பட்டது.
- ஜனவரி 9, 1991 இல் பாராளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**நோக்கம்:** 1

- ஜனார்த்தன ரெட்டி குழு (1992) வுடன் கல்வி கொள்கை, 1986 யை மதிப்பிடுதல்.
- இரண்டு குழுக்களின் ஆய்வின்படி தேசிய கல்வி கொள்கையில் சிறு மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் செய்யப்பட்டன. (1992)

**குறிக்கோள்:** 1

- கல்வியின் பற்றாக்குறையை நீக்குதல்
- கல்விக்கு அதிகமான முக்கியத்துவத்தை தரும்போது, மனித உரிமையிலும் சமூகத்தில் மனிதாபிமான மற்றும் சமூகத்தில் மாற்றத்தை கொண்டு வருவதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**குழுக்கள் முக்கியத்துவம் அளிக்கும் பகுதிகள்** 2

1. சமபங்கு மற்றும் சமூக நீதி.
2. அனைத்து கட்டங்களிலும் கல்வி நிர்வாகத்தை பரவலாக்குதல்.
3. கல்வி ஆணைகளில் பங்கேற்பினை ஏற்படுத்துதல்.
4. வேலைக்கு அதிகாரம் அளித்தல்
5. சமூகத்தை புதுமைபாங்குடன் உருவாக்குதல்.

**பரிந்துரைகள்:** 7

**பொதுவான பள்ளி அமைப்பு**

- சம மற்றும் சமூக நீதியை பாதுகாத்தல்
- தரமான மேம்பாடுகளை கொண்டு வருவதன் மூலம் தற்போது உள்ள அரசு பள்ளிகளில் மாற்றங்களை கொண்டுவருதல்.

**கல்வியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை களைதல்:**

- உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பணியாளர்களின் பற்றாக்குறையினால் கிராம பகுதிகள் மற்றும் பழங்குடி பகுதியினர் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ஒருங்கிணைக்கப்படாத இலக்கு பகுதிகளில் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.

**பெண்கல்வியை ஊக்குவித்தல்:**

- பெண்களின் பங்கேற்பினை மேம்படுத்துதல்
- ஒருங்கிணைக்கப்பட்ட அணுகு முறையில் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்.

**மதிப்புக் கல்வி:**

- கல்வியானது மாணவர்களை குடும்பம் மற்றும் சமூகத்திலிருந்து அந்நியப்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்தல்.

**குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்வி**

- விதி 45 நோக்கத்தை விரிவுபடுத்துகிறது.

**கல்விக்கான உரிமை**

- RTE-ஐ அடிப்படை உரிமைகளில் சேர்க்கப்படுவதற்கு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

<u>கரும்பலகை திட்டம்</u>

- மாநில அரசு, கரும்பலகை திட்டத்தை செயல்படுத்த தேவையான நடவடிக்கையை கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்.

<u>நவோதய வித்யாலயா பள்ளிகள்:</u>

- மேலும் நவோதய வித்யாலயா பள்ளிகள் திறக்கப்பட கூடாது
- தற்போதுள்ள 261 நவதோய வித்யாலயா மறுசீரமைக்கப்பட்டு, மாநிலத்துறைக்கு மாற்றப்பட வேண்டும்
- திறமைகளை வளர்ப்பதற்கு, நவதோய வித்யாலயா திட்டத்திற்கு மாற வேண்டும்.

<u>பணி அனுபவம்:</u>

- பாட உள்ளடக்கம் மற்றும் கற்பித்தல் ஆகிய இரண்டிலும் பல்வேறு பாடங்களுடன் ஒருங்கிணைந்து இணைக்கப்பட்டுள்ளது

**6) கல்வி என்பது மிகப்பெரிய ஆயுதம் - அதனைக் கொண்டு நீ உலகத்தினை மாற்றலாம் - உனது கருத்தினை கூறுக.**

<u>அறிமுகம்:</u> 1

- பொருளாதார ரீதியிலும் சமூகவியல் ரீதியிலும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த கல்வி ஒரு முக்கியமான கருவியாகும்
- "ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு குடும்பத்திலும் கல்வியே முன்னேற்றத்தின் முன்மாதிரி" - கோஃபி அன்னான்

<u>கல்வி ஏன் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதமாக கருதப்படுகிறது</u> 10

<u>அ) வறுமை ஒழிப்பு:</u>

- கல்வி வேலை வாய்ப்புகளைத் திறக்கிறது.
- இது வறுமையயைப் போக்க வழிவகுக்கிறது.

<u>ஆ) சமூகத்தீமைகளை எதிர்த்துப் போராடுதல்:</u>

- சோசலிசத்தின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் நியாயமான விஷயங்களுக்கு கல்வி உதவுகிறது.

<u>இ) பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல்:</u>

- குடும்பம் முதல் சமூகம் வரை அனைத்து அம்சங்களிலும் பாலின சமத்துவத்தை உணர கல்வி வழி வகுக்கிறது.

<u>ஈ) கொடிய நோய்களைக் குணப்படுத்துதல்:</u>

- அறிவியல் கல்வியின் உதவியுடன் நவீன யுகத்தில் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது.
- அநீதிக்கு எதிராக குரல் எழுப்புதல்
- உண்மையாக படித்தவர்கள் நீதிக்கு எதிராக நிற்கமாட்டார்கள்.

<u>உ) தொழில்நுட்ப நவீனத்துவம்</u>

- மக்களின் வாழ்க்கைக்கு தேவையான புதுமையான தொழில்நுட்பத்தை பெறுவதற்கான திறவுகோலாக கருதப்படுகிறது.
- அவர்களை கல்வி ஒரு சிறந்த குடிமகனாக மாற்ற உதவுகிறது.
- இது தேசத்தின் முன்னேற்றத்தை உயர்த்துகிறது மற்றும் தீவிரத்தன்மையைக் கொண்டுவருகிறது

<u>முடிவுரை</u> 1

- கல்வி என்பது எளிமையான மற்றும் சக்திவாய்ந்த ஆயுதம், எவரும் தனது நிலையை மாற்றிக்கொள்ள எளிதாகப் பெறலாம். எனவே அனைவரும் நன்கு படித்தவர்களாக இருந்தால் அதுவே உலகத்தையும் மாற்றுவதற்கான சிறந்த வழியாகும்.

**7) கல்வியில்லா மழலையர் சிறகில்லா பறவைகள் - விளக்கத்துடன் தீர்வையும் கூறுக.**

<u>அறிமுகம்:</u> 1

- "கல்வி இல்லாத குழந்தை சிறகு இல்லாத பறவை போன்றது" என்பது ஒவ்வொரு வீட்டிற்கும், தேசத்திற்கும எச்சரிக்கை மணி, குழந்தைகள் நாட்டின் எதிர்காலத் தலைவர்.
- கல்வியறிவு இல்லாத குழந்தை இந்த போட்டி உலகில் வாழாது, அதேபோல் குழந்தைகளின் கல்வியறிவை உறுதி செய்யாமல்; ஒரு தேசம் எதிர்காலத்தில் வாழ முடியாது.

<u>குழந்தைகளின் கல்வியின் முக்கியத்துவம்:</u> 2

- பகுத்தறிவு சிந்தனை மற்றும் அறிவு வளர்ச்சியை ஊக்குவித்தல்
- மதிப்புமிக்க திறன்கள் மற்றும் வாழ்க்கை விழுமியங்களைப் பெறுதல்
- வறுமையின் சுழற்சியை உடைத்தல் மற்றும் சமூக சமத்துவமின்மையின் இடைவெளியை நிறுத்துதல்
- அவர்களை தன்னிச்சையாகவும் தன்னிறைவு உள்ளவர்களாகவும் மாற்றுதல்.

<u>குழந்தை கல்வியறிவின்மையின் தாக்கங்கள்</u> 4

- குறைந்த வேலைவாய்ப்பு
- அமைப்புசாராத் துறையில் முறைசாரா தொழிலாளர்களின் அதிக வளர்ச்சிக்கு மூல காரணம்

- வறுமையின் தீய வட்டத்தில் தாக்கப்பட்ட மோசமான ஊட்டச்சத்து மற்றும் மோசமான ஆரோக்கியம்
- குழந்தைத் தொழிலாளர், குழந்தை திருமணம் மற்றும் குழந்தை துஷ்பிரயோகம் போன்ற பல சமூக தீமைகளை நிலைநிறுத்துதல்
- அதிக குற்ற வழக்குகளில் ஈடுபாடு.

**குழந்தைகளின் கல்வியறிவின்மைக்கு முக்கிய காரணம்:** 2

- வறுமை – வறுமை காரணமாக, பொற்றோர்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்றனர்.
- அவர்களை பொருளாதார ஊக்கியாக செயல்படும்படி கட்டாயப்படுத்துகின்றனர்.
- குறைந்த அணுகல் – இன்னும் கிராமப்புறங்களில் உள்ள பல குழந்தைகளுக்கு எளிதில் எதையும் அணுகும் நிலை இல்லை
- கல்வியில் தோல்வி – கல்வி மற்றும் பாடத்திட்டத்தை சமாளிப்பதில் சிரமங்கள்
- மோசமான அணுகுமுறை – சோம்பல், மோசமான நவீன மற்றும் கல்வி பற்றிய எதிர்மறையான கருத்து.

**சிக்கலைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள்:**

**அ) அரசியலமைப்பு நடவடிக்கைகள்:** 2

- சட்டப்பிரிவு 21A இலவச மற்றும் கட்டாயக் கல்வி 6 – 14 ஆண்டுகள்
- சட்டப்பிரிவு 45 – ஆரம்ப குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி (0 – 6 ஆண்டுகள்)

**ஆ) சட்டரீதியான நடவடிக்கைகள்:**

- கல்விக்கான உரிமைச் சட்டம் – 2009

**இ) கொள்கைகள் மற்றும் திட்டங்கள்:**

- தேசிய கல்விக் கொள்கை – 2020
- நிபுன் பாரத் பணி
- தேசிய டிஜிட்டல் எழுத்தறிவு திட்டம்

**முடிவு:** 1

- கல்வியறிவு பெற்ற குழந்தைகள் நாட்டின் உண்மையான பொக்கிஷம், எனவே கல்வி இல்லாத குழந்தை ஒரு தனிநபரின் பிரச்சனை அல்ல, மாறாக அது நமது தேசத்தின் எதிர்கால செழிப்பின் பிரச்சனை ஆகும்.

**8) தொழில்முனைவோரின் பணிகள் யாவை? தொழில் முனைவோர் செயல்பாடுகளைக் குறிப்பிடவும்:**

- சமூகத்தின் மாறிவரும் முகவரான தொழிலதிபர் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறார்

**தொழில் முனைவோர் செயல்பாடுகள்:**

1. ஊக்குவிப்பு செயல்பாடு
2. நிர்வகிக்கும் செயல்பாடுகள்
3. வணிகச் செயல்பாடு

**I. ஊக்குவிப்பு செயல்பாடு:** 4

1. புதிய யோசனை கண்டுபிடிப்பு – யோசனை உருவாக்கம்
2. வணிக நோக்கத்தைத் தீர்மானித்தல் – தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களுக்கு துணிகரச் செயலை ஒழுங்கமைத்தல்
3. விரிவான பகுப்பாய்வு
4. வணிகத் திட்டத்ததை தயாரித்தல் – குறிப்பிட்ட நேரத்திற்குள் இலக்குகளை அடைய உதவுதல்
5. நிதி திரட்டல் – புத்தகங்கள், நிதி நிறுவனங்கள், துணிகர காலக் கடன்கள் மற்றும் பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களை வழங்குதல்
6. இயந்திரங்கள் மற்றும் பொருள் கொள்முதல் – பயனுள்ள விநியோகச் சங்கிலி அமைப்புகளின் மூலதன உருவாக்கம்

**II. மேலாண்மை செயல்பாடுகள்:** 4

1. திட்டமிடல் – இலக்குகள், திட்டம், கொள்கைகள், நடைமுறைகள், பட்ஜெட், அட்டவணை,
2. ஒழுங்கமைத்தல் – துறைகளை உருவாக்குதல்,பொறுப்பு பரவலாக்கம் மற்றும் மேற்பார்வை அதிகாரம் மனித வளத்தின் அடிப்படையில் விநியோகிக்கப்படுகிறது.
3. வழிநடத்துதல் – வழிகாட்டுதல், துணை அலகுகளுடன் தொடர்பு கொண்டு இலக்குகளை அடைய உழைத்தல்
4. ஒருங்கிணைப்பு – பரவலாக்கப்பட்ட உற்பத்தி கட்டமைப்பு மற்றும் உற்பத்தி வகைகளின் மேற்பார்வை

**II. வணிகச் செயல்பாடுகள்:** 4

1. உற்பத்தி – தயாரிப்பு வகை வடிவமைப்பு குறிக்கப்பட்ட மற்றும் உற்பத்தியின் வகை தொடர்பான முடிவை எடுப்பது.
2. சந்தைப்படுத்தல் – சந்தை ஆராய்ச்சி, நுகர்வோர் ஆராய்ச்சி, விலை நிர்ணயம், விநியோகம் மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்
3. கணக்கியல் – வணிகத்தின் நிதி நிலைகளை அறிய இருப்புநிலை, பணப்புழக்கம் லாபம் மற்றும் இழப்பு அறிக்கையைத் தயாரித்தல்.
4. மனிதவளமேலாண்மை – மனிதவளத்தின் சரியான மதிப்பீடு மற்றும் செயல் திறனைப் பெறுதல்

9) **வருமுன் காப்பது நலம் - இவ்வாக்கியத்தை பெருகிவரும் தொற்றாநோய் இந்தியாவில் பரவுதல் தொடர்புபடுத்தி ஆராய்க.**

**அறிமுகம்** 1

- தொற்றா நோய் என்பது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நேரடியாயத் பரவாத ஒரு நோயாகும். ஆனால் அது நாள்பட்டதாகவோ அல்லது கடுமையானதாகவோ இருக்கலாம்.
- தொற்றா நோய் ஆபத்தானது, ஏனென்றால் தொற்றா நோய் க்கு எதிரான தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பல மணிநேரம் தேவை.

**இந்தியாவின் என்சிடியின் பரவல்** 1

- ICMR அறிக்கையின்படி இந்தியாவில் இறப்பு விகிதத்தில் 60% தொற்றா நோயால் நிகழ்கிறது.
- நீரிழிவு நோயின் பரவலில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா உள்ளது.
- புற்றுநோய் அதகரித்துள்ளது ஆண்டு விகிதம் 1 – 1.2%

**தனிநபர் மற்றும் தேசத்தில் தொற்றா நோய் விளைவு**

- சுகாதாரப் பராமரிப்புச் செலவு அதிகம் 1
- மாரடைப்பு, புற்றுநோயை குணப்படுத்த அதிக செலவாகிறது.
- அகால மணரம்
- இந்தியாவில் 53% பேர் தொற்றா நோயால் அகால மரணத்திற்கு உள்ளாகின்றனர்.
- வாழ்நாள் உடல்நலக் கோளாறு
- நீரிழிவு மற்றும் நாள்பட்ட நுரையீரல் நோய் –வளர்சிதை மாற்றக் கோளாறு, அதிகரித்த இரத்த அழுத்தம், அதிக எடை, இரத்தச் சர்க்கரைக் குறைவு

**தனிப்பட்ட காரணங்களே தொற்றா நோய்க்கு முக்கியமான காரணிகள்** 4

1. ஆரோக்கியமற்ற உணவு – அதிகப்படியான உணவு மற்றும் துரித உணவு கலாச்சாரம்
2. உடல் பயிற்சி இல்லாமை – மோசமான உடல் பராமரிப்பு, உடற்பயிற்சி அல்லது யோகா செய்வதற்கு நேரம் ஒதுக்குவதில்லை
3. உணவே மருந்தாக பாரம்பரியத்தை பின்பற்றாது.
4. புகையிலையின் பயன்பாடு
5. 3இல் ஒரு நபர் உயிரைக் கொல்லும் மது அருந்தும் பழக்கம் உடையவராக இருத்தல்
6. மனஅழுத்தம் தொடர்பான கோளாறு மற்றும் மனச்சோர்வு
7. மோசமான உணவுப் பழக்கம் – சர்க்கரை உணவுகள் மற்றும் கார்பனேற்றப்பட்ட பானங்கள் மற்றும் உணவுகளை அதிகமாக உட்கொள்வது
8. சுகாதார விழிப்புணர்வு இல்லாமை

**தொற்றா நோயைக் கட்டுப்படுத்த தடுப்பு நடவடிக்கைகள்** 4

**1. அரசு தரப்பில் இருந்து நடவடிக்கை**

1. சிகிச்சைக்கான வலுவான அறிவுறுத்தலுக்கான பட்ஜெட்டில் சுகாதார செலவினங்களை அதிகரித்தல்
2. வலுவான ஆரம்ப பரிசோதனை முறையை வழங்குதல்

**2. தேவையான நடவடிக்கைகள் மக்களிடமிருந்து**

- ஆரோக்கியமான உணவை உண்ண வேண்டும்.
- யோகா, உடற்பயிற்சியின் மூலம் ஆரோக்கியமாக இருத்தல்
- பாரம்பரிய உணவுப் பழக்கங்களைப் பின்பற்றி ஆரோக்கியத்தைக் கண்காணிக்க எல்லா இடங்களிலும் வழக்கமான உடல்நலப் பரிசோதனை

**3. தற்போதைய திட்டம்**

**அ) மத்திய அரசு**

- ஆத்ம நிர்பா ஸ்வார்ட் பாரத் திட்டம்
- NPCDCS – புற்றுநோய், சர்க்கரை நோய் , இருதய ரத்தக்குழாய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய திட்டம்

**ஆ) மாநில அரசு திட்டங்கள்**

- அம்மா ஆரோக்கியத் திட்டம்
- மக்களைத் தேடி மருத்துவம்
- வருமுன் காப்போம் திட்டம்

**முடிவுரை** 1

- வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் அதைத் தடுக்கலாம்.
- எனவே, இந்த வளர்ந்து வரும் உடல்நலப் பிரச்சினையை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரே எளிய தீர்வு வருமுன் காப்பதே ஆகும்.

10) **தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கம் என்றால் என்ன? மேலும் திட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.**

**தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கம்**

**தோற்றம்** 1

- 15 ஆகஸ்ட் 2020

SURESH'

- அமைச்சகம் – சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்
- செயல்படுத்துதல் – தேசிய சுகாதார ஆணையம்

**பின்னணி** 0.5

- தேசிய சுகாதாரக் கொள்கை 2017 இந்த யோசனையைக் கொண்டுள்ளது.
- சத்யநாராயண கமிட்டி பரிந்துரைத்தது.

**நோக்கம்** 0.5

- டிஜிட்டல் முறையில் இணைப்பதன் மூலம், அவர்களுக்கு நிகழ் நேர சுகாதாரப் பதிவுக்கான அணுகலை வழங்குவதன் மூலம் ஒருங்கிணைந்த சுகாதார அமைப்பை உருவாக்குவது

**தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கத்தின் நான்கு கூறுகள்**

1. தேசிய சுகாதார மின்னணுப் பதிவுகள் 1
2. தனிநபர் சுகாதாரப் பதிவு (PHR)கட்டமைப்பு – இது பின்வருவனவற்றின் இரட்டைச் சவால்களை எதிர்த்துப் போராடும்
- நோயாளிகள் தொடர்பான தரவுகள் / அவர்களின் உடல்நல பதிவுகள் / சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக இருக்க வேண்டும்.
- மருத்துவ ஆராய்ச்சிக்கு தரவுகளை கிடைக்கச் செய்தல்
3. தேசிய சுகாதார பகுப்பாய்வு தளம்
4. பிற கிடைமட்ட கூறுகள்
- தனித்துவமான டிஜிட்டல் உடல்நல அடையாள அட்டை
- உடல்நல தரவு அகராதிகள்
- மருந்துகளுக்கான விநியோக சுழற்சி முறையில் நடைமுறைப்படுத்துதல்
- கட்டண நுழைவாயில்

**NDHM ன் முக்கியத்துவம்** 8

**1. உலகளாவிய சுகாதார பாதுகாப்புக்கு ஆதரவு**

- உலகளாவிய சுகாதார பாதுகாப்புக்கு ஆதரவளிக்கும் வகையில் ஒரு தேசிய டிஜிட்டல் சுகாதார சூழலமைப்பை உருவாக்குதல்

**2. உடல்நல அடையாள அட்டை**

- ஒவ்வொரு இந்திய குடிமகனும் மருத்துவமனைகள், மருந்தகங்கள் எல்லாவற்றிலிருந்தும் சேவைகளைப் பெற தங்களுக்கான தனி அடையாள அட்டை கொண்டு பதிவு செய்திருக்க வேண்டும்.

**3. தனிப்பட்ட சுகாதார நிபுணர் பதிவு**

- சுகாதார சேவைகளை வழங்குவதற்காக சுகாதாரப் பாதுகாப்பு நிபுணரின் விரிவான அறிக்கை

**4. சுகாதார வசதிகள் பதிவு**

- பல்வேறு மருத்துவ முறைகள் முழுவதும் பெற விரிவான அறிக்கை

**5. தனிப்பட்ட சுகாதார பதிவுகள்**

- மின்னணு பயன்பாட்டில் டிஜிட்டல் பதிவு செய்து நோயாளியின் ஆரோக்கியத்தை நிர்வகித்தல்

**6. டிஜிட்டல் மருத்துவர்கள்**

- டிஜிட்டல் கையொப்பத்துடன் கூடிய மருந்துச் சீட்டை வழங்குதல்

**7. தொலை மருந்தக சேவைகள்**

- தொலைவிடங்களிலும் சிகிச்சை அளித்தல்

**8. இ- பார்மசி**

- இணையத்தில் மருந்துகளை வழங்குவதை உறுதி செய்தல்
- இவ்வாறு NAHM அனைவருக்கும் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்த வேலை செய்கிறது.

**முடிவுரை** 1

**தேசிய டிஜிட்டல் ஹெல்த் மிஷன் (NDHM) உள்ளடக்கியது**

- அனைத்து வயதினருக்கும் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு
- உலகளாவிய சுகாதார பாதுகாப்பு
- குடிமக்களை மையமாகக் கொண்ட சேவைகள்
- தரமான பராமரிப்பு
- பொறுப்புக்கூறல் செயல்திறன்
- சேவைகளை வழங்குவதில் செயல்திறன்
- முழுமையான மற்றும் விரிவான சுகாதார சூழல் அமைப்பை உருவாக்குதல்

**அலகு – 3**

1) **ஊழலை கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள்/ ஊழலை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?**

**அறிமுகம்:** 1

- ஊழல் என்பது உலகலாவிய ஒரு செயலாகும். இது வளர்ச்சியைத் தடுக்கிறது மற்றும் அநீதி, சமத்துவமின்மையை ஊக்குவிக்கிறது.
- ஐக்கிய நாடுகளின் சபையின் பொதுச் செயலாளர் அன்டான்யோ குடேர்க்ஸ், ஊழல் என்பது மக்களின் நம்பிக்கைக்கான துரோகமாகும் எனக் கூறுகிறார்.

**ஊழலைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட அரசின் நடவடிக்கைகள்** **8**

**ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான சட்ட கட்டமைப்பு**

- ஊழல் தடுப்புச் சட்டம் 1988 அரசு ஊழியர்களின் ஊழல் மற்றும் ஊழலுக்கு ஊக்கமளிக்கும் செயலில் ஈடுபடுபவர்களுக்கு அபராதம் விதிக்க வகை செய்கிறது.
- பண மோசடி தடுப்புச் சட்டம் 2002 பணமோசடி சம்பவங்களை தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் இந்தியாவில் குற்றத்தின் மூலம் பெறப்பட்ட வருமானம் பயன்படுத்துவதை தடை செய்கிறது.
- நிறுவனங்கள் சட்டம் 2013 கார்ப்பரேட் நிர்வாகத்திற்கும் மற்றும் கார்ப்பரேட் நிர்வாகத்தின் துறையில் நிகழும் ஊழல் மற்றும் மோசடிகளை தடுப்பதற்கும் வகை செய்கிறது.
- நிறுவனங்கள் சட்டத்தின்படி ஏமாற்றுபவருக்கான முழுமையான விளக்கத்தையும் மற்றும் ஏமாற்றுவதை இச்சட்டத்தின்கீழ் குற்றமாக கருதப்பட வேண்டும் என கூறுகிறது.
- இந்திய தண்டனைச் சட்டம் 1860 குற்றவியல் நம்பிக்கை மீறல் மற்றும் ஏமாற்றுதல் தொடர்பான குற்றங்கள் உட்பட லஞ்சம் மற்றும் மோசடி விஷயங்களுக்கு விளக்கமளிக்கக்கூடிய விதிகளை அமைக்கிறது.
- வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டம் 2010
- தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் பெறப்படும் வெளிநாடு பங்களிப்புகள் மற்றும் விருந்தோம்பலை ஏற்றுக்கொள்வதையும் பயன்படுத்துவதையும் ஒழுங்குபடுத்துகிறது.

**ஒழுங்குமுறை கட்டமைப்பு**

- லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் 2013 மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு குறை தீர்ப்பாளரை நிறுவுவதற்கு வகை செய்கிறது.
- மத்திய கண்காணிப்பு ஆணையம் 1964இல் உருவாக்கப்பட்டது. ஆனால் 2003இல் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஒரு சுதந்திரமான சட்ட அமைப்பாக மாறியது.

**நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல்.**

- பொதுத் திட்டங்களுக்கு நேரடி பயன் பரிமாற்றம்
- E – governance அறிமுகம் மற்றும் எளிமைப்படுத்துதல்
- அரசாங்கத்தில் இணைய சந்தை மூலம் அரசு கொள்முதலை அறிமுகம் செய்தல்
- பொது கொள்முதலில் இ – டெண்டர் முறையை நடைமுறைப்படுத்துதல்

**சர்வதேச ஒத்துழைப்பு**

- 2003இல் UNGA அமைப்பு 2003இல் ஊழலுக்கு எதிரான ஒப்பந்தத்தின் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- ஆசிய பசுபிக் பகுதிகளில் ஊழலை எதிர்க்கும் நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தத்தில் எண்ணெய் ஏற்றுமதியாளர்கள் நாடுகளுடன் (OECD) கையெழுத்திட்டுள்ளது.

**ஊழலைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைளின் நன்மைகள்:** **2.5**

1. இது வலுவான சட்டக்கட்டமைப்பு மற்றும் சுதந்திரமான பயனுள்ள நீதிமன்ற அமைப்பின் மூலம் அடையப்படுகிறது.
2. ஊழல் மீதான நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு முறையான மேம்பாடுகளை பரிந்துரைக்கிறது மற்றும் அரசாங்கத்தின் பணியின் நடைமுறையை மாற்றுகிறது.
3. தேர்தல் முறையின் போது, தேர்தல் சீர்த்திருத்தங்கள் மூலம் அதிக அளவிலான தொகையை முறைப்படுத்தலாம்.
4. ஊழலற்ற பணிச்சூழலை உருவாக்க உதவுகிறது.
5. ஏழைகள் மற்றும் விளிம்பு நிலையில் உள்ளவர்களின் மீதான ஊழலின் தாக்கத்தை அனுதினமும் பேசப்படும்பொழுது அது அவர்களுக்கு பலனளிக்க கூடியதாக அமைகிறது.

**தீமைகள்** **2.5**

1. சட்டத்திலுள்ள ஓட்டையை கட்டவிழ்ப்பது மிகக் கடினமாகும்.
2. தணிக்கையின் போது நெறிமுறை நடத்தைகளிலிருந்து பொது அதிகாரிகள் விலகல்
3. தகுந்த தேர்தல் சீர்த்திருத்தங்கள் சிந்தித்து செயல்படுத்தப்படா விட்டால் ஊழலை ஒழிக்க முடியாது.
4. இடித்துரைப்பாளர்கள் மீதான பாதுகாப்பினை திறம்பட செயல்படுத்தாவிட்டால் ஊழலைக் குறைக்க முடியாது.
5. ஒரு அரசு அதிகாரியும் அடிப்படை நெறிமுறைகள் மாறும்போது தான் சிறு ஊழலுக்கு எதிராக செயல்படுகிறது.

**முடிவுரை:** **1**


- பழங்காலம் தொட்டே ஜனநாயக இந்தியாவில் மிகப்பெரிய பிரச்சினையாக ஊழல் இருந்து வருகிறது.
- ஊழலுக்கு எதிரான தற்போதுள்ள சட்டங்களை வலுப்படுத்துவதுடன் புதிய நடவடிக்கைகளை உருவாக்குவதுடன் அதை சரிபார்த்தலும் கண்காணிக்கப்பட வேண்டும்.

- ஊழலின் தீமையை தடுக்கும் ஒரு வலுவான நிறுவனத்தை செயல்படுத்த வேண்டும்.
- ஊழலுக்கு எதிரான ஒரு முன்னேற்பாடாக இந்த செயல்முறை அமையும்.

**2) சமூக அபிவிருத்தி திட்டம் பஞ்சாயத்துராஜ்க்கு முன்னர் உள்ள நிலைகளை விவரி**

**அறிமுகம்**

- சமூக அபிவிருத்தி திட்டமானது, காந்தி ஜெயந்தி தினமான அக்டோபர் 2, 1952ல் தொடங்கப்பட்டது.
- இத்திட்டதின் முக்கிய தத்துவமானது கிராமங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் மக்களின் பங்கேற்பாகும்.
- இந்தியாவின் ஆன்மா அதன் கிராமங்களில் உள்ளது – மகாத்மா காந்தி **Bonus - 1**




**நிறுவன அமைப்பு**

**தேசிய அளவில் மத்திய குழு** 3

- திட்டக் கமிஷன் உறுப்பினர்களை கொண்டுள்ளது.
- பல்வேறு வளர்ச்சித் துறைகளின் மத்திய அமைச்சரவை உறுப்பினர்கள்
- **தலைவர்** – பிரதமர்
- **உதவி** – ஆலோசனைக் குழு

**ஆலோசனை குழு**

- மத்திய உணவு மற்றும் விவசாயம், நிதி, உடல் நலம் மற்றும் கல்வி துறைகளின் செயலாளர்கள் அடங்கிய குழு

**மத்திய குழுவின் செயல்பாடு**

- திட்டத்தை செயல்படுத்துவதற்கான முடிவுகளை எடுத்தல்.
- தேசிய மேம்பாட்டு ஆணையத்தால் உருவாக்கப்பட்ட திட்டத்தின் கொள்கை.

**மத்திய தனி அமைச்சகம்**

- 1956இல் தொடங்கப்பட்டது.
- சமூக மேம்பாட்டு அமைச்சகம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

**மாநில அளவில்** 3

**மாநிலம் மேம்பாட்டுக் குழு**

- **தலைவர்** – அம்மாநிலத்தின் முதலமைச்சர்
- **உறுப்பினர்கள்** – மேம்பாட்டு விவகாரத்துறை அமைச்சர்
- **செயலாளர்** – ஆணையருக்கு இணையான மூத்த அதிகாரி

**செயல்பாடு**

- மத்திய மாநிலங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை பேணுதல்.
- மத்திய அரசிடமிருந்து திட்டங்களுக்கான வழிமுறையை பெறுதல்
- மத்திய அரசிடம் வளர்ச்சிக்கான அறிக்கையினை சமர்பித்தல்
- மாவட்டத்திற்கு பொறுப்புடைய மாவட்ட ஆட்சியாளர்களிடம் தொடர்பினை வைத்திருத்தல்.

**மாவட்ட அளவில்:மத்திய ஒருங்கிணைப்பு குழு** 3

- **தலைவர்** – மாவட்ட ஆட்சியர்

**மாவட்ட ஆலோசனைக்குழு**

- பஞ்சாயத்துராஜ் நிறுவனம் தொடங்கப்பட்டதும் இந்த குழுவானது அகற்றப்பட்டு விட்டது.
- ஜில்லா பரிஷத் என்ற புது அமைப்பு உருவாக்கம்
- வட்டார வளர்ச்சி அலுவலர்களை துணையாகக் கொண்டு மாவட்ட ஆட்சியர் மாவட்ட அளவிலான திட்டங்களை செயல்படுத்துகிறார்.

**வட்டார அளவில்** 3

- வட்டார வளர்ச்சி அலுவலரின் தலைமையின் கீழ் செயல்படுகிறது.

**வட்டார வளர்ச்சி அலுவலர்**

- இக்குழுவின் கேப்டனாக செயல்படுகிறார்.
- பல்வேறு வகையான அலுவலர்களிடம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து விதமான வளர்ச்சியினை அடைதல்.

**வட்டார ஆலோசனைக் குழு**

- பஞ்சாயத்துராஜ் உருவாக்கப்பட்ட பின் இக்குழுவானது சர்பன்ஜாஸ், தலைவர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியவர்களை உள்ளடக்கிய பஞ்சாயத்து சமிதியாக மாறியது.

**கிராம அளவில் கிராம பஞ்சாயத்து** 3

- **தலைவர்** – சர்பன்ஞ்
- **அரசு அதிகாரி** – கிராம அளவிலான அலுவலர் என அழைக்கப்படுகிறார்.
- 7-10 கிராமங்களுக்கு பொறுப்பு வகிக்கிறார்.
- கிராம பஞ்சாயத்து உடன் நெருங்கிய தொடர்பில் உள்ளார்.
- கல்வி அறிவு அற்றவர்கள் மற்றும் அறியாமையுடைய கிராமத்தினர் இவர்களுக்கு வளர்ச்சியின் தகவல்களை கொண்டு செல்வதற்கான ஒரு முகவராக விளங்குகிறார்.

**முடிவுரை:**

- சமூக அபிவிருத்தி திட்டமானது மக்களின் பங்கேற்பு இல்லாமை மற்றும் அதிகாரவர்க்கத்திற்கும் கிராமத்தினருக்கும் இடையேயான பஞ்சாயத்துராஜ் உருவாக்குவதற்கான ஒருங்கிணைப்பு இல்லாத காரணத்தினால் தோல்வியடைந்த போதிலும் ஜனநாயக பரவலாக்கல் மற்றும் அடிமட்ட அளவில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்ட பஞ்சாயத்துராஜ் அமைப்பு உருவாவதற்கு வழிவகுக்கிறது.

**3) இந்தியாவில் அரசு சாரா நிறுவனங்களின் நிலையை மதிப்பிடுவதோடு மற்றும் அதன் பிரச்சனைகளை வெளிக்கொணர்க.**

**அறிமுகம்:** 1

- உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான அரசு சாரா நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன. தற்போது 3.3 மில்லியனுக்கும் அதிகமான அரசு சாரா நிறுவனங்கள் இந்திய மத்திய புள்ளியியல் கழகத்தின்கீழ் இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இது ஒவ்வொரு 400 இந்திய குடிமக்களுக்கும் ஒரு அரசு சாரா நிறுவனம் இயங்குகிறது.
- விளிம்பு நிலையில் உள்ள மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்காக பேரிடர் நிவாரணம் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் அரசுசாரா நிறுவனமானது இயங்கிவருகிறது.

**1. தொண்டு நிறுவனங்கள் :** 2

- ஏழைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கி செயல்படக்கூடியது. அதாவது, உடை, மருந்துகள், உணவு விநியோகம், வீட்டுவசதி. பள்ளி போக்குவரத்து போன்றவை.

**2. சேவை நிறுவனங்கள்:**

- கல்வி, சுகாதாரம், குடும்பத்திட்டம் போன்றவற்றின் மேம்பாட்டிற்காக ஈடுபடுத்திக் கொண்ட நிறுவனங்கள்

**3. பங்கேற்பு நிறுவனங்கள்:**

- பணம், நிலம், கருவிகள், தொழிலாளர்கள், பொருட்கள் வழங்குவதன் மூலம் தனிநபர்கள் சுய அளவிலான திட்டத்தினை செயல்படுத்திட தங்களை பங்கேற்கச் செய்தல்.

**4. சமூக அளவிலான நிறுவனங்கள்:**

- மகளிர் அமைப்புகள், விளையாட்டு கழகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் துணை அமைப்புகள்

**5. தேசிய அரசு சாரா நிறுவனங்கள்:**

- மத்திய அளவிலான NGO-க்கள் மாநில மற்றும் மாநில அளவிலான கிளைகளைக் கொண்டு உள்ளூர் மக்களுக்கு ஆதரவினை வழங்குகின்றன.
- தேசிய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் செஞ்சிலுவை சங்கம் தொழில் முறை நிறுவனங்கள் YMCA/YWCA போன்றவை.

**6. சர்வதேச அளவிலான அரசுசாரா நிறுவனங்கள்:**

- சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ரெட்டா பி அரானா மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு நிறுவனங்கள், Care, Oxfam, Fordand Rockefeller போன்ற அறக்கட்டளைகள் மத ரீதியாக குழுக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.

**இந்தியாவில் உள்ள அரசுசாரா நிறுவனங்களின் சட்ட ரீதியான அம்சங்கள்** 2

- அரசு சாரா நிறுவனங்கள் கீழ்க்கண்டவற்றின் மூலம் பதிவினை மேற்கொள்கின்றன.

1. இந்திய அறக்கட்டளை சட்டம் 1882 ன் படி அறக்கட்டளையை பதிவு செய்தல்.
2. சங்கங்கள் பதிவு சட்டம் 1860ன் கீழ் சமூக பதிவு.
3. நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 8ன் கீழ் நிறுவனப்பதிவு
4. 12Aன் கீழ் பதிவு;செய்யப்பட்ட அரசுசாரா அமைப்புகள் வருமானவரித் துறையில் முழு விலக்களிப்பு கூற முடியும்.
5. அரசு சாரா நிறுவனங்கள் 80 சான்றிதழ் மூலம் அதிகளவிலான நன்கொடையாளர்களை ஈர்த்தல்.
6. FCRA 2010 - 2021ன் படி கடந்த 4 வருடங்களில் இந்தியாவில் இயங்கக் கூடிய அரசுசார நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்கமைப்பு) சட்டத்தின்படி பதிவு செய்துள்ள நிறுவனங்கள் ரூ. 50,975 வெளிநாடுகளிலிருந்து நிதி ஆதரவினைப் பெற்றுள்ளன என்று இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

**இந்தியாவில் அரசு சாரா நிறுவனங்களின் பங்கு: 2**

1. அரசு சாரா நிறுவனங்கள் சமூகத்தில் பாதுகாப்பு வழியாக செயல்படுகிறது.
2. அழுத்தக் குழுவாகச் செயல்படுவதன் மூலம் அரசாங்கத்தின் செயல்திறனை மேம்படுத்துகிறது.
3. அரச சரா நிறுவனங்களின் முக்கிய பங்கு சமுதாயத்திற்கான சேவையாகும்.
4. பாலின சமத்துவத்தை கொண்டு வருவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.
5. தேசத்தின் நிலையான வளர்ச்சி.
6. சமூக பங்களிப்பை உருவாக்குதல்.

**அரசு சாரா நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்: 7**

**நிதி பற்றாகுறை:**

- அரசாங்கம் நூறு சதவீத உதவித்தொகையை வழங்குவதில்லை அல்லது மானியம் வழங்குவதில் கால தாமதம் செய்தல்.
- மேலும், இது அரசு சாரா நிறுவனங்களால் பெறப்பட்ட நிதி மீதான கண்காணிப்பை கடுமையாக்கியுள்ளது.
- மேலும் அனைத்து வங்கிகளும் அரசு சாரா நிறுவனத்தின் வெளிநாட்டு பங்களிப்பை 48 மணி நேரத்திற்குள் தெரிவிக்க வேண்டும்.

**அர்ப்பணிப்புடன் கூடிய தலைமைத்துவத்தின் பற்றாகுறை:**

- சுமார் 53% அரசு சாரா நிறுவனங்களின் தலைவர்கள் தங்கள் நிறுவனத்திடம் தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்குவதற்கான வளங்கள் இல்லை என்று கூறுகிறார்கள்.

**போதிய திறனில்லாத நபர்கள்:**

- தொழில்நுட்ப மற்றும் அமைப்புசார் திறனுடைய செயல்பாடு மற்றும் திட்டத்தினை முடிவுறச் செய்தலுக்கான திறன் இல்லாமை.
- கட்டமைப்பிற்கான திறன் குன்றிய நிலை

**அரசு சாரா நிறுவனங்கள் நிதியை தவறாக பயன்படுத்துதல்:**

- 2021ல் NCPCRஆனது மத்திய அரசானது அரசுசாரா நிறுவனங்கள் நிதியை தவறாக பயன்படுத்தியதை வருத்தத்துடன் எண்ணியதை ஆதரித்துள்ளது.
- வெளிநாட்டு பங்களிப்பு மற்றும் (ஒருங்கிணைப்பு) சட்டத்திற்கு மத்திய அரசானது ஆதரவு வழங்கியுள்ளது.

**ஒருங்கிணைப்பு இல்லாமை:**

- இந்தியாவிலுள்ள அரசு சாரா நிறுவனங்களில் ஒருங்கிணைப்பு இல்லாமை மற்றும் நெட்வொர்கிங் இல்லாமை ஆகியவை மிகப்பெரிய பிரச்சனை ஆகும்.
- சிறந்த அளவிலான அரசுத்துறைகள் மற்றும் அரசுசாரா நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு பெற வேண்டும்.

**மக்களின் பங்களிப்பு இல்லாமை:**

- தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மக்களை பங்களிக்க செய்வதில் உள்ள இயலாமை.
- போதுமான எண்ணிக்கையில் அர்ப்பணிப்புள்ள நபர்கள் இல்லாதது அரசு சாரா நிறுவனங்களின் பிரச்சனைகளாக உள்ளது.
- மேம்பாட்டிற்கான செயல்பாட்டை குறைத்து மதிப்பிடுதல்

**குறை மதிப்பீட்டு மேம்பாட்டு நடவடிக்கைகள்**

- ஒவ்வொரு வருடத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 2-3 % அளவிற்கு குறைக்ககூடிய அரசு சாரா நிறுவனங்களான கிரீன் பீஸ், அம்னெஸ்டி, கார்டாய்ட் போன்ற நிறுவனங்களின் மீது இந்தியாவின் உளவுத்துறை பணியகமானது குற்றம் சாட்டுகிறது.

**முடிவுரை: 1**

- அரசு சாரா நிறுவனங்கள் தங்களுடைய வேலை மற்றும் நிதி செயல்பாடுகளின் வெளிபாடு தன்மைகளுடன் செயல்படுவதை நோக்கமாகவும் மற்றும் குறிக்கோளாகவும் கொண்டு செயல்பட வேண்டும்.
- இந்தியாவில் அரசுசாரா நிறுவனங்களின் செயல்பாடு எண்ணிக்கையில்லா ஆலோசனைகள் மற்றும் வளங்களை அரசாங்கமானது உணர்ந்திட வேண்டும்.
- ஒட்டுமொத்தமாக அரசு சாரா நிறுவனமானது, தனியாக எங்களால் குறைந்த அளவிலும் இணைந்து செயல்பட்டால் அதிகமாகவும் செயல்பட முடியும் என்ற தத்தவத்தை செயல்பாட்டில் கொண்டுள்ளது

**4) பெண்கள் உலகின் பயன்படுத்தாமல் தேங்கிகிடக்கும் திறமைகளின் மிகப்பெரிய உறைவிடம் - இந்திய பெண் தொழில் முனைவோர்கள் மேற்குறிப்பிட்ட வாக்கியத்தின் அடிப்படையில் விளக்குக. மேலும் தமிழக அரசின் முயற்சிகளை பட்டியலிடுக.**

**நேருவின் கூற்று 1**

- பெண்கள் தங்கள் குடும்பத்திலிருந்து முன்னேறி கல்வி மற்றும் விழிப்புணர்வை பரப்பும் பொழுது புராதன குடும்ப கட்டமைப்பிலிருந்து பெண்களின் பங்களிப்பானது திறமையான தொழில் முனைவோராக மாற்றம் அடைகிறது.

**பெண்தொழில் முனைவோர் நிலை-இந்தியாவில்** 2

- ஒட்டுமொத்த தொழில் முனைவுகளில் பெண்கள் 10% அளவிற்கு தொழில் முனைவோர்களாக உள்ளனர். பெருநகரங்கள் மற்றும் நகரப்புறங்களில் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களிலும் அவர்கள் தங்கள் தொழில்முனைவுத் திறனை உறுதி செய்கின்றனர்.
- வடிவமைப்பாளர்கள் போன்ற பல்வேறு துணிகர வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.
- அலங்காரம், அரசாங்க உற்பத்திகள், கல்விசார் கருத்தரங்குகள் போன்றவை
- தொழில் முனைவோர்கள் தங்களது திறமை சார்ந்த தலைமைத்துவ பண்பு கொண்டவர்களை இலக்காக அமைத்துக் கொள்கின்றனர்.
- வேலை தேடுபவர்கள் என்ற நிலையிலிருந்து வேலை வழங்குபவர்கள் என்ற நிலைக்கு மாற்றமடைகின்றனர்.

**பெண்தொழில் முனைவோர் குறைவாக பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள்** 7

**1. நிதிச்சிக்கல்கள்**

- கண்டுபிடிப்புகளின் ஆதாரத்தை நீட்டிக்க இயலாத துவர்ப்புத்தன்மை
- பொதுவாக அவர்களிடம் எந்த சொத்துக்களும் இல்லை.

**2. குறைந்த வெளிசெல்லும் நிலை**

- குடும்பம் மற்றும் குடும்ப பொறுப்புணர்வுகள் மற்றும் ஒரு தொழில்முனைவோர் நிலையாக ஈடுபடுத்திக் கொள்வதில் சிரமங்கள்

**3. சகபோட்டியாளர்கள்**

- உலகமயமான சந்தைகளில் சுதந்திரமாக மற்றும் திறம்பட ஒரு போட்டியாளராக செயல்பட முடியாத நிலை

**4. கல்வியறிவின்மை**

- கல்வியஷீவல்லாத அல்லது குறைக்கல்வி அறிவு கொண்ட தொழில்முனைவோர்கள் பயணத்தில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர்.

**5. ஆலோசனை வழங்கப்படாத நிலை**

- வணிக ஆலோசனைகள் மற்றும் சந்தைசார் சேவைகள் என்பவை பல்வேறு சவால்களை கொண்டிருக்கிறது.

**6. சமூக கலாச்சாரத் தடைகள்**

- குடும்பம் மற்றும் வணிகம் என இரண்டு விதமான பொறுப்புணர்வுகள்
- ஒற்றைக் கூலியாளர்கள் உயர்ந்த நிலையிலான பதவி வகிக்கின்றனர்.

**7. உணர்திறன்**

- நிலையான முடிவுகள் எடுப்பதில் ஏற்படக்கூடிய உணர்திறன் சார்ந்த அபாயங்கள்
- தோல்விகளை சகித்துக் கொள்ளும் குறைந்த தன்மை மற்றும் சோர்வடைதல் போன்றவை வியாபாரத்தின் செயல்திறனை குறைக்கும்.

**தமிழக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்** 4

- தமிழக அரசால் எடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகள் மூலம் அதிகப்படியான பெண் தொழில் முனைவோர்களின் நிறுவுகையை கொண்ட மாநிலமாக உள்ளது. (10.87 லட்சம் அலகுகள்)
- ஒற்றைச்சாளர அனுமதி முறைகள்
- மூலதன மானியம்
- வட்டி குறைக்கும் மானியங்கள்
- நுண் கடன்களின் மூலம் நிதியியல் உதவி
- சுயஉதவிக்குழுக்களின் உருவாக்கம்
- குறைக்கப்பட்ட வரிவிலக்குகள்
- மூலதன பணஉதவி மற்றும் மானிய உதவிகள்
- அதிகாரப்பக்க விதிவிலக்குகள்
- வியாபார ஆலோசனைகள் மற்றும் நிதியியல் சார் உதவிகள்
- மாவட்ட தொழில்துறை மையங்கள்
- புதிய தொழில்முனைவோர்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தைப் பயன்படுத்தி சந்தையிணைப்பு மற்றும் பயிற்சிகளுக்கான திறன்களைப் பெறுகின்றனர்.

**முடிவுரை** 1

- இந்தியாவில் பாதியளவு பெண்கள் உள்ள நிலையில் பெண் தொழில் முனைவுத்திறனை பயன்படுத்தாமல் இருக்கும்பட்சத்தில் நம் நாடு வளர்ச்சியடைந்த நாடுகளைப் போன்று பொருளாதாரத்தில் வெற்றியடையாது.
- மேலும் இது நமது மனித மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் தடையாகவும் இருக்கும்.
- எனவே அனைவரும் பயன்படுத்தப்படாத இந்திய பெண் தொழில்முனைவு வளங்களை பயன்படுத்துவதற்கு கூட்டு முயற்சிகள் மூலம் பயன்படுத்தி இந்தியாவை மேம்படுத்துவோம்.
- சமுதாயத்தின் சமூகப் பொருளாதார நலன்களுக்காக பயன்படுத்தப்படாத வளங்களை பயன்படுத்துவதற்கான தேவையை உணரும் வழிகாட்டுதல்கள்.

SURESH

5) **கோவிட் – 19ஐக் கட்டுப்படுத்த தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து கட்டுரை எழுதுக.**

**அறிமுகம்** 1

- தமிழக அரசு மிகக் குறைவான காலகட்டத்தில் திறமையானதிட்டமிடல். நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள் மூலம் கோவிட் – 19 காலகட்டத்தின் மிகப்பெரிய சறுக்கல்களை திறம்பட கையாண்ட முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

**தமிழக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

**1. பொது முடக்கம்** 10

- தமிழகத்தின் முதல் தொற்று 7 மார்ச் 2022 அன்று கண்டறியப்பட்டது.
- தேசிய அளவிலான பொது முடக்கத்தை ஏற்றுக்கொண்டு அதன்பின் நன்கு திட்டமிடப்பட்ட மாவட்ட அளவிலான பொது முடக்கத்தை அமல்படுத்தியது.

**2. கட்டுப்படுத்தும் மையங்கள்**

- மிக நெருக்கமான அளவல் கண்காணித்தல் மற்றும் திறமையான கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக கட்டுப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**3. காய்ச்சல் முகாம்கள் மற்றும் ஒவ்வொரு நிலையிலும் பரிசோதித்தல்**

- நாற்பது கண்டறியப்பட்ட நோய்த்தொற்று பகுதிகள் மூலம் பெருந்தொற்றினை பரவாமல் கட்டுப்படுத்தச் செய்தது.

**தகவல் தொழில்நுட்பம் மூலமான தீர்வுகள்**

**1. இ–சஞ்சீவினி , ஓபிடி**

- தமிழக அரசாங்கம் தொலைதூர மற்றும் சுகாதார சேவைகளுக்கான காணொலி மருத்துவ ஆலோசனைகளுக்கான இலவச காணொலிகளை வழங்க ஏற்படுத்தப்பட்டது.

**2. கோவிட் – 19 கேர் தமிழக செயலி**

- கோவிட் பற்றிய அவசரகால தகவல்களை அளிக்கவும் கட்டுப்படுத்தப்படும் மையங்களை அறியவும் பயன்படுகிறது.

**3. கோவிட் 19 தனிமைப்படுத்தும் மையங்கள் கண்டறிதல்**

- புவிமைய துணைக்கோள் மூலமாக கோவிட் – 19 தொடர்புடைய நோயாளிகளின் நிகழ்நேர இருப்பிடத்தை பற்றிய தகவல்கள் அளிக்க

**5. மாநில அவசர கட்டுப்பாட்டு செயல்பாட்டு அறை**

- 24 × 7 கால்சென்டர் உதவியுடன் கட்டுப்பாட்டு அறைகள்
- கோவிட் தொடர்புடைய முழுமையான தகவல்களை சேகரிக்க
- அவசரமான சிகிச்சை தேவைப்படும் நபர்களை பரிசோதிக்க அஷீக்கை அளித்தல்

**6. மக்களிடையே பெருமளவில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

- பொது இடங்களில முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் மற்றும் பின்பற்றாத நபர்களுக்கு அபராதம் விதித்தல்

**7. கிருமிநாசினி வழிகள்**

- அரசாங்கம் இயந்திரங்கள் மற்றும் டரோன்களின் உதவியுடன் கட்டுப்படுத்தும் இடங்களில் கிருமிநாசினியை தெளித்தது.

**8. வலுவான மூலதன முதலீடு**

- கோவிட் – 19 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க பல்சிறப்பு மருத்துவமனைகளை ஏற்படுத்தியது.
- மிகப்பெரிய அளவிலான சுகாதார கவனத்திற்காக அதிகரிக்கப்பட்ட சுகாதாரச் செலவினங்கள்

**9. சுகாதார நலத்தின் மீதான அழுத்தத்தை குறைத்தல்**

- வென்டிலேட்டர்கள், பிபிஇ கருவிகள், என் – 95 முகக்கவசங்கள் போன்ற மருத்துவம் சார்ந்த உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்குதல்
- மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் போன்றவர்களை நியமனம் செய்து கோவிட் – 19 நோய்த்தொற்றிற்கு சிறப்பு மருத்துவம் செய்தல்

**10. தடுப்பூசி விநியோகம்**

- மிகப்பெரிய அளவிலான விநியோக முறைமையுடன் தடுப்பூசிகளை வழங்குவதில் முதன்மை மாநிலமாக செயல்பட்டது.
- மிகப்பெரிய அளவிலான பொது முகாம்கள் நடத்தி தேவையான அளவைவிட அதிகமான அளவுகள் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

**11. கோவிட் – 19 துயர் நீக்க நிதி**

- கோவிட் – 19 நோய்க்கான துயர் நீக்க நிதியாக குறிப்பாக பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு துயர் துடைக்கும் வண்ணம் முதலமைச்சர் நிவாரண நிதி நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது.
- இவ்வாறு தமிழக அரசாங்கம் அனைத்து செயல்பாடுகளிலும் கோவிட் – 19ஐக் கையாள்வதிலும் அனைவருக்குமான சுகாதாரம் மற்றும் உடல்நலனைப் பேணுவதிலும் முக்கியகப் பங்காற்றுகிறது.

**கோவிட் - 19 கட்டுப்படுத்துவதில் தமிழக அரசு எதிர்கொண்ட சவால்கள்** **3**

**1. மிகக் குறைந்த அளவிலான பரிசோதனைகள்**

- சராசரியாக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரித்தபோதிலும் அவை அனைத்து மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான வாய்ப்புகளுடனும் பரிசோதனைகளிலும் சீராக அமையவில்லை.

**2. அதிக அளவிலான பரிசோதனைகளில் நோய்த்தொற்று உறுதி செய்யப்படுகிறது**

- தொடக்கக் காலத்தில் தமிழகம் கட்டுப்படுத்தும் அளவினை விட அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளைக் கொண்டிருந்தது.

**3. அதிக இறப்புகள்**

- மாநிலம் ஒரு நாளைக்கு 200 இறப்புகளுக்கு மேலாகப் பதிவு செய்தது.
- பரிசோதனை மேற்கொள்ளப்படும் மொத்த நபர்களில் இறப்பினைச் சந்திக்கும் நபர்களின் எண்ணிக்கையானது மாநில சராசரியான 12 மாவட்டங்களில் 1.2 என்ற விகிதத்தை விட அதிகமாகும்.

**4. இரட்டிப்பாகும் காலம்**

- மார்ச் 2020 முதல் மாநில அரசு கோவிட் - 19 நோய் தொற்று 14.3 இலட்சமாக 14 மாதங்கள் எடுத்துக்கொண்டது. நோய்த்தொற்றின் வளர்ச்சி விகிதம் தொடர்ச்சியாக அதிகரித்து இரட்டிப்பானது.
- எனவே தமிழகத்தின் நிலுவையில் உள்ள மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது.

**5. சுகாதார முறைமையில் காணப்பட்ட பற்றாக்குறை**

- அவசர சிகிச்சைப்பிரிவு படுக்கைகள் அல்லது ஆக்சிஜன் தட்டுப்பாடு
- அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அனைத்து மருத்துவ பணியாளர்களின் எண்ணிக்கையிலும் கட்டுப்பாடு
- முன்னிலை ஊழியர்களான சுகாதாரப் பணியாளர்கள், காவல்துறையினர் மற்றும் தன்னார்லர்களின் போன்றவர்களின் கட்டுப்பாடு

**6. தடுப்பூசி விநியோகம்**

- தொடக்க காலத்தில் மாற்று மருந்துகள் எத்தகைய கால தாமதமுமின்றி விரைவாக வழங்கப்பட்டது.
- தடுப்பூசி அறிமுகம் செய்யப்பட்ட பிறகு, அரசாங்கத்திற்கு அனைத்து மக்களுக்கும்தடுப்பூசியினை முறையாக விநியோகம் செய்தல் என்பது மிகப்பெரிய சவாலாக மாறியது.
- சில தனியார் நிறுவனங்கள் கள்ளச்சந்தைகள் மூலம் மருந்துகளை பதுக்கி பெருமளவில் இலாபம் ஈட்ட எண்ணியது.
- இது மருந்திற்கு பெருமளவிலான செயற்கை தட்டுப்பாட்டைக் கொண்டு சென்றது.

**முடிவுரை** **1**

- கோவிட் –19 பெருந்தொற்றானது விளிம்பு நிலையில் உள்ள மக்கள் மற்றும் அடித்தட்டு மக்களிடையே நீண்டகால சுகாதார வெளிப்பாட்டிற்கு முன்னுரிமை அளிப்பதற்கு அத்தியாவசியமாக உணரப்பட்டது. தமிழ்நாடு இந்தியாவில் கூடுமான அளவில் மக்களைப் பாதுகாப்பதற்கு கோவிட் –19ஐ எதிர்த்துப் போரிட்ட முதன்மையான மாநிலமாகத் திகழ்ந்தது.

---

**6) கல்வியில் போடப்படும் முதலீடானது சிறந்த வட்டியைத் தரும் - நாட்டின் பொருளாதாரத்தில் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி கட்டுரை எழுதுக.**

**அறிமுகம்** **1.5**

- நெல்சன் மண்டேலா கூறியவாறு கல்வி என்பது உலகத்தை மாற்றக்கூடிய மிக வலிமையான மாநிலமாகும்.
- எனவே கல்வி என்பது மனித வளங்களை திறம்பட உற்பத்தி செய்வதிலும் மற்றும் தேசியத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் மேம்பாடு அடைய மிக முக்கிய முதலீடாகக் கருதப்படுகிறது.

**கல்வி மீதான முதலீட்டிற்கான முக்கியத்துவம்** **8**

**1. தேசத்தின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது**

- தேசத்தின் விரைவான மற்றும் நிலையான பொருளதாரத்தை அடைவதற்கு கல்வி என்பது முதன்மை ஆயுதம்

**2. தனிநபர் கற்றல், அதிகரித்தல் மற்றும் வறுமையைக் குறைத்தல்**

- ஒவ்வொரு பள்ளி ஆண்டு அதிகரிக்கும் வேளையில் தோராயமாக வருமானம் ஈட்டல் 10% அளவிற்கு அதிகரிக்கிறது.
- கல்வியானது திறன் மேம்பாட்டிலும் பங்களிப்பதால் அதிகமாக பணம் செலுத்தப்படும் வேலைவாய்ப்பினைப் பெறச் செய்வதால் வறுமையைக் குறைக்கிறது.

**தரவுகள்**

- கல்வியானது வறுமையின் அளவை 30% குறைக்கிறது.

**3. பொருளாதார சமத்துவமின்மையைக் குறைக்கிறது.**

- கல்வியானது ஏழை மற்றும் பணக்காரர்களுக்கு இடையேயான பாகுபாட்டை பெருமளவில் குறைக்கிறது.

**4. வளமுடைய மனிதவள மூலதனம்**

- மனிதவளம் மற்றும் பொருளாதார வளர்ச்சி இரண்டும் ஒன்றையொன்று சார்ந்துள்ளதால் இது ஒரு வளமுடைய மனிதமூலதனத்தை உருவாக்கக் காரணமாகிறது.

**5. தொழில்நுட்ப மேம்பாடுகள்**


- கல்வி வளர்ச்சியினால் ஏற்படும் தானியங்கி வளர்ச்சி என்பது பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு விளைவாக உள்ளது.
- திறம்சார்ந்த கல்வியின் மூலம் ஒரு தேசம் சர்வதேச வடிவமைப்பு மற்றும் உற்பத்தி முகமைகளை தனது திறன்சார்ந்த வேலையாட்கள் மூலம் செயல்படுத்த இயலும்.

**6. நாட்டின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடுகளை அதிகரித்தல்**

- வேளாண்மை மற்றும் உயிரி தொழில்நுட்பத்தின் மீதான சிறப்பு கவனத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடானது நமது தேசத்தின் பொருளதாரத்தை மேம்படுத்தும்

**7. குற்றச் சம்பவங்கள் குறைக்கப்படும்**

- கல்வியானது மதிப்பினை மட்டும் அளிக்காமல் பொது மக்களுக்கு குற்றவியல் செயல்பாடுகள் தொடர்புடைய விழிப்புணர்வையும் ஏற்படுத்தித் தருகிறது. **4**




- இந்தியா கல்விக்காக 3-3.5% அளவிற்கு ஜிடிபி- யில் செலவு செய்கிறது. இது மற்ற வளர்ச்சி அடைந்த நாடுகளை ஒப்பிடும் பொழுது மிகவும் ஆக்கப்பூர்வமானதாக இல்லை.
- அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 5%மும், கனடா 5.5%மும், ஜப்பான் மற்றும் ஜெர்மனி முறையே 3.6% மற்றும் 4.8 சதவீதங்கள் செலவு செய்கின்றன.
- மேலும் இந்நாடுகளின் மக்கள் தொகையும் குறைவாகக் காணப்படுகிறது.
- வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் நாடுகள் கூட உதாரணமாக சீனா, பிரேசில், அர்ஜெண்டினா போன்றவை 4%, 6.2% மற்றும் 5.5% என்ற அளவிற்கு கல்விக்கு செலவு செய்கிறது.
- இந்தியாவில் தோராயமாக எண்ணிக்கையளவில் 6% இருப்பதாக வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.
- உண்மையில் இந்தியா இது தொடர்பான தரத்தில் பின்தங்கி 198 நாடுகளில் 144-வது இடம் பிடிக்கிறது.

**முடிவுரை :** **1.5**

- கல்வியானது ஒரு நாட்டின் அனைத்து ரூபங்களிலான அதிகார மயமாக்கலில் முக்கிய ஆயுதமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.
- எனவே கல்வியில் செய்யப்படக்கூடிய முதலீடானது மிகவும் அத்தியாவசியமானது மேலும் நீண்ட காலத்திற்கு சமுதாயத்திற்கு தேவையான நன்மைகள் அழிக்கக்கூடியது.
- எனவே கல்வி என்பது அனைத்து நாடுகளிலும் மிக பெரிய அளவிலான முதலீட்டாக உள்ளது.

